


பராசக்தி

கதை, வசனம்: மு. கருணாநிதி

பராசக்தி

முழு வசனம் - பாடல்கள்

திரைக்கதை, வசனம்
கலைஞர் மு. கருணாநிதி

விலை ரூபாய் 1-00.

நேஷனல் பிக்சர்ஸ்

பராசக்தி

நடிகர்கள்

சிவாஜி கணேசன்	ஸ்ரீரஞ்சனி
சகஸ்ரநாமம்	பண்டரிபாய்
எஸ். எஸ். ராஜேந்திரன்	சுசீலா
துரைசாமி	கண்ணம்மா
டி. கே. ராமச்சந்திரன்	அங்கமுத்து
வி. கே. ராமசாமி	முத்துலக்ஷ்மி
கே. பி. காமாக்ஷி	ஏ. எஸ். ஜெயா

மற்றும்

வெங்கட்ராமன்	கார்த்திகேயன்
நம்பிராஜன்	கிருஷ்ணன்
சக்திவேல்	நாராயணசாமி

கதை—வசனம்

கலைஞர் மு. கருணாநிதி

பாடல்கள்

பாரதியார், பாரதிதாசன், உடுமலை நாராயணகவி
மு. கருணாநிதி, கே. பி. காமாக்ஷி சுந்தரன்
கு. ம. அண்ணல்தங்கோ

சங்கீதம்

ஆர். சுதர்சனம்

பின்னணிப் பாடல்கள்

சிதம்பரம் எஸ். ஜெயராமன், டி. எஸ். பகவதி
உசேன், எம். எல். வசந்தகுமாரி
எம். எஸ். ராஜேஸ்வரி

நடனம்

குசலகுமாரி, குமாரி கமலா

ஸ்டுடியோ

ஏ. வி. எம்.

டைரக்ஷன்

கிருஷ்ணன் - பஞ்சு

கலைஞர் மு. கருணாநிதியின்

பராசக்தி

முழு வசனம்—பாடல்கள்

காட்சி—1

(மதுரையில் கல்யாணிக்குத் திருமணம் நடக்கப் போகும் சமயம் அவளது அண்ணன்மார்களான சந்திரசேகரன், ஞான சேகரன், குணசேகரன் ஆகிய மூன்று பேரும் ரங்கூனில் இருக்கின்றனர். அப்போது மதுரையில்...ஒரு கூட்டத்தில் நாட்டியம் நடைபெறுகிறது.)

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வளமார் எமது திராவிட நாடு (வாழ்கவே
சூழும் தென் கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல் சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறனும் செறிந்த நாடு (வாழ்க
பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளு மலையாளம்
கண்டை நிகர் கன்னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு (வாழ்க
அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக்குவியும் கடல்கள்
முகிலும் செந்நெல்லும் முழங்க நல் செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு (வாழ்க
ஆற்றில், புனலின் ஊற்றில், கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு (வாழ்க

(ஆடல், பாடல்கள் முடிந்தவுடன் மாப்பிள்ளை பேசுகிறார்)

தங்கப்பன்: (மாப்பிள்ளை பெரியோர்களே இதுவரையில் யுதுமையின் குரலை புதுமையாட்டத்துடன் கலந்து ரசித்தீர்கள். இத்தகைய எழில்மிக்க நாட்டின்குழந்தைகள் இந்த மண் மாதாவின் மடியிலே தவழாமல் வேறு நாடு சென்று வருகின்றனர். இதை நினைக்கும் போது நமது அறிஞர் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது காரணம் கற்பனையாக சொல்லப்போனால்...சொந்த நாட்டிலே பிழைக்க வழி இல்லாமல் அயல்நாடு சென்று தமிழர்கள் அழுது வடித்த கண்ணீர்தான் காரணம் என்றார். அவ்வளவு

ஏன்? இதோ நான் திருமணம் செய்து கொள்ளப் போகும் திருமதிகல்யாணி தன் சகோதரர்களின் முகத்தையே பார்த்த தில்லையாம்! அவ்வளவு இளமையிலேயே அவர்கள் இரங்கூன் சென்றுவிட்டனர். அவர்கள் மட்டுமல்ல! எத்தனையோ லட்சக் கணக்கான இளைஞர்கள். எத்தனையோ குடும்பங்கள்! மலேயா வின் ரப்பர் தோட்டத்திலே! ஆப்பிரிக்காவிலே, இலங்கை யிலே அவர்கள் எல்லாம் நம் திரு நாட்டுக்குத் திரும்ப வேண் டும். அதைத்தான் இந்த அழகிய பாடலும் நமக்கு நினை வூட்டுகிறது.

காட்சி—2

(இரங்கூனில்...குணசேகரன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஞானசேகரன் வருதல்)

ஞான : தம்பி! தம்பி குணசேகரா டேய் எழுந்திரு இன்னுமா தூங்குறே? எழுந்திரப்பா தம்பி டேய் குணசேகரா? (ரேடியோ வைத்தல்) டேய் கும்பகர்ணு எழுந்திரு!

குண : ம்... அய்யய்யோ...என் ஞண்ணே! தூங்குற போது வந்து விஷாயாண்டுகிட்டு...

(இந்நேரம் சந்திரசேகர் வருதல்)

சந் : என்ன ஆரம்பிச்சிட்டீங்களா? பொழுதுவிடிஞ்சுட்டு தில்ல.

ஞான : அண்ணு குணசேகரன் இப்பத்தான் எழுந்திரிச் சான்.

குண : இல்லேயண்ணு நான்காலையிலே அஞ்சரைமணிக் கெல்லாம் எழுந்திரிச்சிட்டேன்.

ஞான : இல்லேண்ணு பொய் சொல்றான்.

சந் : ஞானசேகரா! ஏம்பா பொய் சொல்றே! தம்பிக்குத் தான் சூரிய உதயத்தைப் பார்க்கவே பிடிக்காதே ம்...ஊரிலே இருந்து...

குண : தங்கச்சி போட்டா வந்திருக்கா?

சந் : தங்கச்சிக்கு கல்யாணம் நிச்சயம் செய்து அப்பா கடிதம் எழுதியிருக்காரு!

சந் : அட பார்ரா! நாம் எல்லோரும் எப்போ ஊருக்குப் போகிறது!

சந் : டிக்கட் புக் பண்ணச் சொல்லி போன் பண்ணி யிருக்கிறேன். பதில் இப்போ வந்திடும். (அண்ணியிடம் போதல்)

குண : அண்ணி! குட்நியூஸ்! கல்யாணிக்குக் கல்யா ணம் உங்களுக்குத் தெரியுமா?

ஞான : அண்ணிக்குத்தானப்பா முதல்லே தெரிஞ் சிருக்கும். இல்லேயண்ணு...!

(சந்திரசேகரன் அவன் மனைவி சரஸ்வதியினுடைய தந்தையின் போட்டாவைப் பார்த்து கண்ணீர் விடுகிறான்)

சரஸ் : தங்கச்சிக்குக் கல்யாணம்! இப்படி திடீர்னு வருத்தப்படுறீங்க

சந் : இல்லே...ஒங்க அப்பா படத்தைப் பார்த்தவுடன் என்னமோ மாதிரி இருந்திச்சி மனமே மாறிடுச்சி நம்ம கல்யாணத்துக்கு அவரு இருந்து எவ்வளவோ நல்லா நடத்தினாரு இப்ப இந்தக் கல்யாணத்துக்கு இல்லேன்னுதான்...

சரஸ் : அதுக்குத்தான் ஒங்க அப்பா இருக்காரே

சந் : என்ன இருந்தாலும் சீரழிந்த குடும்பத்தைச் செல்வமாக்கினவரு அவருதானே சின்ன வயசிலே இருந்து அவருடைய ஆதரவிலேதானே வளர்ந்தோம். மடியிலே வீணாண்டோம்.

(காப்பி குடிக்க உட்காருகின்றனர்)

ஞான : குணவைப் பார்த்து டேய்! கீழே வைடா பல் விளக்கிறதுக்குள்ள என்னடா காப்பி.

சந் : ஞானசேகரா! நீ சும்மா இருப்பா நீ சாப்பிடு தம்பி.

குண : கல்யாணிக்கு என்ன பரிசு கொடுக்கிறது?

சந் : கல்யாணிக்காக நம்ம இதயங்களே துடித்துக் கொண்டிருக்கின்றன. இதைவிட நல்ல பரிசு நம்மால் வேறென்ன அளிக்க முடியும். (போன் மணி அடிக்கிறது) ஹலோ—சந்திரசேகரன் ஸ்பீக்கிங்

பேசு : டிக்கட் கேட்டீங்களாமே?

சந் : ஆமாம்...

பேசு : எத்தனே?

சந் : போர்...நாலு

பேசு : நாலா முடியாதே சார்!

சந் : முடியாதா? எப்படியாவது முயற்சி செய்யுங்க சார் ப்ளீஸ்—

சரஸ் : பெரிய பாரிஸ்டர் இதுக்கு எத்தனே ப்ளீஸ் போட வேண்டியதிருக்கு.

பேசு : உங்களுக்கு தெரியாதா? வார் டைம்...

சந் : வார் டைம் சரி சார்! எங்க குடும்பத்துக்கு முக்கியமான மேரேஜ்! அவசியம் எல்லோரும் போகத்தான் வேண்டும்.

பேசு : பேமிலிக்கு ஒருத்தரைதான் அலவ் பண்றது? மொத்தமே முந்நூறு சீட்டுதான் ஒரு டிக்கட் தான் இருக்கு...

சந் : சரி புக் பண்ணுங்க

ஞான : என்ன அண்ணு?

சந் : நாளைக்கு சென்னைக்கு புறப்பட்ற கப்பல்ல மொத்தமே முன்னூறு டிக்கட்தானும்! அதுவும் குடும்பத்துக்கு ஒருத்தர்தானும். தங்கையின் வாழ்விலே பொன் விழா? அதை நாம் எல்லோரும் சேர்ந்து பார்க்க கொடுத்து வைக்கலே.

சரஸ் : அப்படீன்னு யார் போறது?

குண : (ஆவலுடன்) நான் போகிறேன்

சந் : ஞானசேகரா தங்கைக்கு வேண்டிய புடவை நகையெல்லாம் எடுத்து பெட்டிக்குள்ளே வச்சிட்டு குணசேகரனை வழி அனுப்பி விட்டு வா. (ஞான சேகரன் வருந்துகிறான்) ஞானசேகரா ஏம்பா கவலைப்படுற? நாமெல்லாம் போகலாம்.

ஞான : அண்ணு, அதுக்குள்ளே யுத்த நிலைமை ரொம்பவும் மோசமாகியிட்டா?

சந் : எப்படியும் போய்ச் சேரலாம்

சரஸ் : நான் கல்யாணிக்காக அரை டஜன் சேலையும் ஜாக்கெட்டும் தர்றேன் பெட்டியிலே இடம் இருக்குமா?

ஞான : தங்கைக்கிண்ணு தலைமேலேகூட தூக்கிட்டுப் போவானே, சும்மா கொடுத்தனுப்புங் 3 அண்ணி

(குணசேகரன் புறப்படுகிறான்)

காட்சி—3

(மதுரையில் கல்யாண கோலத்துடன் கல்யாணி கண்ணுடி முன்னால் கண்ணீர் விட்டுக்கொண்டே...

கல்யாணி : அண்ணு என்னை மறந்து விட்டீர்களா? அம்மா என்று கூப்பிட கொடுத்துவைக்காத எனக்கு அண்ணு என்று கூப்பிட நீங்கள் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன். உலகில் ஒரு அண்ணன் இருந்து பெண்ணைப் பிறந்தால் பெரும் துளி என்பார்களே எனக்கு மூன்று அண்ணன்மார்கள் இருந்தும் என் கல்யாணத்தைக் காண ஒருவர் கூட வரவில்லையே...

பார் : கல்யாணி! அழாதேம்மா! அசந்தர்ப்பம்—எல்லோருக்கும் ஏற்பட்டதுதானே...வருவாங்க...

கல் : அசந்தர்ப்பம்—இல்லே! என் அதிர்ஷ்டம்

மாணிக்கம் : கல்யாணி! வருத்தப்படாதே அண்ணன்மார் எப்படியும் வருவார்கள் நேரம் ஆகுது வா

கல் : அப்பா அண்ணன் வருவார்கள் என்று எவ்வளவு நாள் காத்திருந்தேன் என்மணக்கோலத்தை காண இன்னும் அண்ணன் ஒருவரும் வரவில்லையே?

மாணிக் : வருவாங்கம்மா! இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு வருவார்கள் அழாதேம்மா

கல் : அப்பா கல்யாணத்தை தள்ளி வைச்சிட்டா என்னப்பா?

மாணிக் : ஐயர் வச்ச நாளம்மா தவறினு தகராறு வந்திடும் வா எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க

(திருமணம் இனிது நடந்தேறுகிறது)

காட்சி—4

(கல்யாணி தன் கணவனோடு மாங்குயில் கூவும் சோலையில் பைந்தமிழ் பண்பாடி மகிழ்தல்)

தங் : இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
என் இதய ராணி ரூபம்

கல் : இந்த தீபத்திலே சுடராய் திகழ்வதென்
தீரனின் ரூபம்

தங் : இள மாமயில் ரூபம்

கல் : இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
நம் காதல் தீபம்

தங் : கனியே! கன்னல் தமிழே அமுதே
பனி தூங்கும் மலரே! நிலவே

கல் : கனிவான மொழியால் எனையே
கவர்ந்தீரே காந்தச் சிலையே

தங் : உனைக் காணும்போது நெஞ்சில்
ஊறிடும் உணர்ச்சிதனையே எழுதவோர்
எழுத்தும் இல்லையே

இரு: திருநாளிதுபோல் தினம் ஆடிப்பாடியே
தேன்போல் வாழ்வோம் (இல்

காட்சி—5

[இரங்கூனில்]

ஞா : (பேப்பர் படித்தல்) உலகப் போரின் உச்சநிலை ஜப்பான் யுத்த முஸ்திப்பு! இரங்கூன் கடலோரங்களில் எதிரிகள் கப்பல்கள் இந்தியா போய்ச் சேரவில்லை—அண்ணு இந்தச் சேதியை அப்பாவும் தங்கையும் கேள்விப்பட்டால் ரொம்பவும் வருத்தப்படுவாங்க. கல்யாணக் காரியமெல்லாம் தடபுடலாக நடந்துகிட்டு இருக்கும்.

சந்திர : ஆமாம் குணசேகரன் புறப்பட்டுப்போன கப்பல் இன்னும் மெட்ராசுக்கே போய்ச் சேரலியாமே மணக்கோலத்தில் இருக்கும் தங்கையை பார்க்க முடியாத பாவியாகி விட்டோம்.

[இந்நேரம் ரேடியோவில் யுத்தச் செய்தி சொல்லப் படுகிறது. இன்று எதிரிகளின் குண்டு வீச்சினால் பலத்த சேதம்...சுமார் ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். பர்மாவில் ஒரு நகரமே காலியாகி விட்டது.]

சரஸ் : நாம் இப்படி எத்தனை நாளைக்குத்தான் உயிர் வாழுறதாம்.

ஞான : உயிர் தப்புவதே பெரிய கஷ்டம்போல் இருக்கு.

சந் : இனியும் நம்ம இங்கு இருக்கக் கூடாது நடந் தாவது இந்தியா போய்ச் சேருவோம்.

[இரங்கூன் விட்டு கால்நடையாக வெளியேறுகின்றனர்]

காட்சி—6

[மதுரையில் கல்யாணியும் கணவன் தங்கப்பனும்]

தங் : கல்யாணி!

கல் : இதோ வந்துட்டேன்.

தங் : ஹூம்...புறப்படு சீக்கிரம்

கல் : ஏன் பறக்கிறீங்க (ஆடை அணிந்து வரும் போது தந்தையைப் பார்த்து) அப்பா போய்விட்டு வர்றேம்.....

மாணிக் : சரியம்மா ஜாக்கிரதையா போயிட்டுவாங்க,

[இந்நேரம் எதிர்வீட்டு பார்வதி வருகிறாள்]

பார் : கல்யாணி...

கல் : வாங்க அக்கா

பார் : நல்ல சமயத்திலேதான் வந்திருக்கேன். எங்கே பிரயாணம்?

மாணி : ஒண்ணுமில்லே மாப்பிள்ளே எழுதின கதை படம் பிடிக்கப் போறுங்களாம்.

தங் : ஆமா! கல்யாணி ரொம்ப நாளா படம் பிடிக் கிறதை பார்க்கணும் பார்க்கணுமுன்னு தொந்தரவு பண்ணுது.

பார் : போகவேண்டியது தான். முழுகாதிருக்கிற பொண்ணு இப்படி நேரம் காலம் இல்லாமல் வெளியே போனால் நல்லாவா இருக்கு.

மாணி : தப்புதான் குழந்தை ஆசைபடுதில்லே போயிட் டுத்தான் வரட்டுமே.

கல் : இன்னைக்கு ஒரு நாளைக்குத்தானக்கா!

பார் : ம்...போம்மா! போ! மாப்புள்ளே நீ சொன்ன படியெல்லாம் கேட்கிறாரு! பையன் வந்துல்ல அடக்கணும்.

கல் : போங்க அக்கா

மணி : அதுக்குள்ளே பையன்னே தீர்மானம் பண்ணிட்டியா?

பார் : நான் தீர்மானித்தாலும் தீர்மானிக்காவிட்டாலும் அவுங்க ரெண்டு பேருமே தீர்மானம் பண்ணிட்டாங்களாம் பையனுக்கு பன்னீர் செல்வம்னு பெயர் வைக்கிறதா...

தங் : அதுமட்டுமல்ல பெண் பிறந்தால் நாகம்மான்னு பெயர் வைக்கிறதா தீர்மானிச்சிருக்கோம்.

(புறப்படுகின்றனர்)

மணி : என் பொண்ணு புத்திசாலிதான். இந்த சந்தோஷத்தைப் பார்க்க மகன்களும் இருந்தால்...

காட்சி—7

(குணசேகரன் சென்னை வந்து கப்பலிலிருந்து இறங்கி காரில் ஏறி அமர்ந்திருக்கிறான்.)

பிச்சை : சாமி...

குண : சரிதாம்போ! தமிழ்நாட்டின் முதல் குரலே ரொம்ப நல்லா இருக்கே!...(பிச்சை கொடுக்கிறான்)

மற்ற : அய்யா...பிள்ளைக் குட்டிக்காரன்.

குண : (கொடுத்து முடிந்தவுடன்) டிரைவர் போப்பா?

(காரில் புறப்பட்ட குணசேகரன் பேங் வந்து சேருகிறான் பணங்களைப் பெரும்போது அதனைக் கண்ட வீதியிலே நடமாடும் விபச்சாரி அவனைப் பின் தொடருகிறாள் நெஞ்சிலே நஞ்சுகொண்டு. பணங்களைப் பெற்றுக்கொண்டு ஒரு ஹோட்டலில் தங்குகிறான். ஹோட்டல் மானேஜரிடம் டிக்கட் புக் பண்ணிவிட்டு மீண்டும் தன் அறைக்கே திரும்பி உள்ளே நுழைகிறான். அங்கே—அவனைப் பின்தொடர்ந்த ஜாலி என்ற யுவதி படுத்திருக்கிறாள். அவளைக் கண்ட அவன்...)

குண : மன்னிக்கணும்! தவறி ஒங்க ரூமுக்கு வந்து விட்டேன், எல்லா ரூமும் ஒரே மாதிரியா இருக்கிறதால் வித்தியாசம் தெரியலே!

ஜாலி : பரவாயில்லே! பரவாயில்லே ஒங்க ரூம் நெம்பர்?

குண . செவன்! -

ஜாலி : செவன்...என் நெம்பர் எயிட் பக்கத்து ரூம் தவறி யவள் நான்தான் (உடனே வெளியேறுபவள் போல் பாவனை செய்கிறாள்)

குண : பரவாயில்லே! பரவாயில்லே (பையன் காப்பி கொண்டு வந்து கொடுக்கிறான்)

குண : காப்பி சாப்பிடுங்க...

ஜாலி : உம்...வேண்டாம்...தேங்ஸ்

குண : சும்மா சாப்பிடுங்க (கொடுக்கிறான்)

ஜாலி : ம்...உங்க...ஊரு

குண : மதுரைக்குப் போகனும்!—டிரெயினே மிஸ் பண்ணிட்டேன்.

ஜாலி : நானும் அப்படித்தான்

குண : நான் சினிமாவுக்குப் போகணும்!...டைம் ஆகுது

ஜாலி : (வெறுப்புடன்) சினிமாவுக்கா சீ! அது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்காது.

குண : ஏன்

ஜாலி : அதைக் குளோஸ் பண்ணுவதற்கு ஒரு சங்கம் ஏற்பட்டால் அதற்கு நான்தான் தலைவியாக இருப்பேன். நம்ம நாட்டுக்கு ஏற்றது பரதநாட்டியம் டான்ஸ் இதுக்குப் போனால் எவ்வளவோ நல்லா இருக்கும் எனக்குத் தெரிஞ்ச இடத்திலே நல்ல டான்ஸ் இருக்கு வாங்க அங்கே போவோம்.

குண : (வியப்புடன்) நீங்களுமா?

ஜாலி : ஏன் இப்படி வித்தியாசமா நினைக்கிறீங்க? உங்க தங்கையாக இருந்தால் அழைச்சிட்டு போகமாட்டீங்களா? இப்படி தப்பாக நினைக்காதீங்க.

குண : சரி போவோம்.

காட்சி—8

(ஜாலக்காரி ஜாலியுடன் ஓர் தாசி வீட்டில் நடக்கும் நாட்டியத்தை வெறுப்புடன் ரசிக்கிறான்)

ஓ ரசிக்கும் சீமானே வா
ஜொலிக்கும் உடையணிந்து
களிக்கும் நடனம் புரிவோம்—அதை
நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் (ஓ ரசிக்கும்

கற்சிலையும் சித்திரமும் கண்டு—அதன்
கூட்டழகிலே மயக்கம் கொண்டு சிற்சிலையின்
கட்டழகிலே மயக்கம் கொண்டு—வீண்
கற்பனையெல்லாம் மனதில்
அற்புதமென்றே மகிழ்ந்து
விற்பனை செய்யாதீர் மதியை—தினம்
நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் (ஓ ரசிக்கும்
வானுலக மோட்சமதை நாடி—இன்ப
வாழ்க்கையை இழந்தவர்கள் கோடி—பெண்களின்
வாழ்க்கையை இழந்தவர்கள் கோடி—வெறும்
ஆணவத்தினாலே பெரும் ஞானியைப்போல நினைந்து
வீணிலே அலைய வேண்டாம்—தினம்
நினைக்கும் பொழுது மனம்
இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம்

(குணசேகரன் டான்ஸ் கச்சேரியில் ஜாலக்காரி ஜாலியால் குளிர்ந்த பானத்தில் மயக்க மருந்திட்டு மயக்கப்பட்டு தன் பணத்தை பூராவும் பறிகொடுக்கிறான்)

(கல்யாணி வீடு)

டாக்டர் : (கல்யாணியைப் பரிசோதித்து விட்டு) அவசரமாக இந்த மருந்தை வாங்கிக்கொண்டு வாங்க.

தங்கப்பன் : (எதிரே வரும் மாமனுரைப் பார்த்து) இப்போ எப்படி இருக்கு?

மாணிக் : (டாக்டர் சீட்டைக் காட்டி) அவசரமாக இந்த மருந்தை வாங்கிக்கொண்டு வாங்க. (தங்கப்பன் சைக்கிளில் வேகமாக செல்லுகிறான்)

பார்வதி : (வெளியே வந்து) பேரன் பன்னீர்செல்வம் பிறந்திருக்கிறான்.

மாணிக் : (களிப்புடன்) மாப்பிள்ளை! மாப்பிள்ளை!

(மருந்தை வாங்கிவரப் போய்க்கொண்டிருந்த மாப்பிள்ளை வீட்டின் எதிரே காரில் அடிபட்டு விழுந்து இறக்கிறார். அதைக் கண்ணுற்ற மாமனுர் மாணிக்கம் பிள்ளை அதிர்ச்சியால் மரணமடைகிறார். கல்யாணி விதவையாகிறாள்.

காட்சி—9

குண : அய்யோ—ஏமாந்தேன் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கடல் கடந்து வந்தேன் கல்யாணி காலையிலே உன்னை காணலாம் என் அத்தானைக் காணலாம் அப்பாவைக் காணலாம் என்று ஆசை அலைமோதிக் கிடந்தேன். நெஞ்சிலே

நஞ்சைக் கொட்டி விட்டாள்.. கொஞ்சிக் குலாவி கொடுமை செய்துவிட்டாள் வஞ்சகி, இதைவிட என்னைக் கொன்றிருக்க லாமே அவள். பஞ்சையாய்...பராரியாய்—என் தங்கைக்கு இப்படித் தரிசனம் தர வேண்டுமா நான்? வறுமை, திருட்டு, வஞ்சகம், விபச்சாரம்! எங்கே? வற்றுத ஜீவநதிகள் வளந் தோடும் நாட்டிலே வளமான சோலைகள் பூத்துக் குலுங்கும் பூமியிலே! வாழ முடியாதவர்களை வாழவழி தெரியாதவர்களை வாழ்வதற்கே பிறந்தவர்களை! இந்த வங்கத்திலே என்னை வந்ததும் வராததுமாய் வாட்டி வதைக்கவா வேண்டும்? சிங்கத் திருநாடே! நீ சிலந்தி கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழவைக்கும் வளமிகு தமிழகமே! நீ சொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாட்களாக? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம் பெற்ற என் அருமை பொன்னுடே! நீ வீதிகளிலே விபச்சாரிகளைத் திரிய விட்டு உன் விழிகளை மூடிக் கொண்டது ஏன்? ஏன் வானத்தை முட்டும் மாளிகைகள் மானத்தை இழந்த மனிதர் கள்; உயர்ந்த கோபுரங்கள்...தாழ்ந்த உள்ளங்கள்! ஏ, தமிழ் நாடே! இதுதானு உன் பெருமை? தகுதி? யோக்கி யதை? கல்யாணி!...நீ மதுரையிலே...நான் மதராஸ் தெரு விலே! மாறுத மனக் குழப்பத்துடன்...அநாதையாக ஆதர வற்றவனுக! யாரிடமும் எதுவும் பேசமுடியாத ஊமையாக!... ஐயோ...கல்யாணி...கல்யாணி.

காட்சி—10

(சந்திர சேகரனும், அவன் மனைவி சரஸ்வதியும், தம்பி ஞானசேகரனும் வரும் வழியில் ஜப்பான் விமானங்கள் போட்ட குண்டுகளால் பாதிக்கப் படுகிறார்கள்)

(சந்திரசேகரனும் சரஸ்வதியும் ஆஸ்பத்திரியில்)

சந் : டாக்டர் சார்...ஞானசேகரன் எந்த பெட்லே இருக்கான்?

டாக் : ஞானசேகரனு? அப்படி ஒருவர் இங்கே இல் லேயே.

சந் : ஆ! அப்படியானால் எங்கே இருப்பார்கள்.

டாக் : அந்தக் குண்டு வீச்சிலே மீதி யிருப்பவர்கள் இவ்வளவு பேர்தான். இதைத்தவிர மற்றவர்களெல்லாம் செத்துப் போயிட்டாங்க.

சந் : ஆ! ஞானசேகரா! நீ இறந்தா போனுய்? சரஸ்வதி ஊருக்குப் போனவுடன் ஞானசேகரனை எங் கேன்னு அப்பா கேட்பாரே—கல்யாணிக்கு என்ன பதில் சொல்வேன்.

சரஸ் : டாக்டர்! அவருக்கு கொஞ்சம் சொல்லுங்க.

டாக்: மிஸ்டா சந்திரசேகரன் மனதைக் குழப்பிக்கிடா தீங்க அமைதியாக இருங்க.

காட்சி—11

(மதுரையில் கடன்காரர்கள் மாணிக்கம் பிள்ளையின் வீட்டை ஏலமிடுகின்றனர்)

விளம்பரம் : இதனல் யாவருக்கும் தெரிவிப்பது என்ன வெனில்; மரசிக்கோனூர் தெரு, மாணிக்கம் பிள்ளையின் வீடாகிய இந்த ஆரும் நம்பர் வீட்டை நாளை பகல் மூன்று மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும், இது கோர்ட்டார் உத்தரவு.

ஒரு : டேய் தம்பி! பார்ரா இந்த பரிதாபத்தை...இரங் கூனிலே வில்லிக்கொத்து போல மூணு பிள்ளைகள் செல்வச் சிறப்போடு இருக்காங்க என்ற தைரியத்திலே இந்த அப்பாவி மாணிக்கம் பிள்ளை கடன் வாங்கி மகள் கல்யாணத்தை ஆடம் பரமாக நடத்திட்டு அந்த மனுஷனும் மண்டையைப் போட் டுட்டான். இரங்கூனில் ஜப்பான் குண்டு வீச்சிலே இந்த பசங்கள் என்ன ஆனுங்களோ? அட அதுதான் போகட்டும் இந்தப் பொண்ணு கல்யாணி கையிலே இருந்த பணம், நகை நட்டையெல்லாம் விற்றுக்கொடுத்தக்கூட ஒண்டி இருந்த வீட்டுக்கே ஆபத்து வந்திரிச்சி...ம் இன்னும் என்ன நடக்கப் போகுதோ?

காட்சி—12

(கல்யாணி கண்ணீர் சிந்திய முகத்துடன் கையிலே குழந்தையை வைத்துக்கொண்டு வாசலில் உட்கார்ந்து பாடு கிறுள்)

பூமாலே நீயே புழுதி மண்மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய்? (பூமாலே
பாராயோ என் பன்னீர் செல்வமே
சீரோடு வாழ்ந்தோம் வேரோடு சாய்ந்தோம்
ராஜாங்கம் போலே வாழ்ந்த வாழ்வும் வீழ்ந்ததே
பாழான எந்தன் வயிற்றில் பிறந்தாய் ராஜா!
நீயேன் பிறந்தாய் (பூமாலே
பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும் பறந்தோடி வந்திடும்
கோடானு கோடி ஏழை மாந்தர் வாழும்
சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்தாய்—ராஜா
நீயேன் பிறந்தாய்? (பூமாலே

(பாடல் முடிந்ததும் பார்வதி வருகிறுள்)

பார் : கல்யாணி எப்ப பார்த்தாலும் இப்படிக் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தால் என்ன ஆகும்? நடக்க வேண்டியதைப் பாரு.

கல்யா : இந்தக் குழந்தையை வளர்க்க யாராவது முன் வந்தால் நடக்க வேண்டியது தானாக நடக்கும்.

பார் : குழந்தை என்ன செய்யும் பாவம்...

கல் : அக்கா குழந்தை ஒண்ணும் பாவமில்லே! இந்தக் குழந்தையை வறுமையிலே வளர்க்க முடியாததுதான் பெரிய பாவம்.

பார் : கல்யாணி! நான் சொல்வதைக் கேளு. ஊர்க் கோடியிலே எங்களுக்கு இருக்கும் காலி மனையிலே ஒரு வீடு ஒண்ணு கட்டிக்கோ ஒரு சாதாரண இட்லி கடை வைத்தால் வயிறு வளர்க்க முடியாமலா போகும்?

கல் : ஆ! இட்லிக் கடையா?

பார் : தமிழ் நாட்டிலே தாலி அறுத்தவர்க்கெல்லாம் அது தானே தாசில் உத்யோகம்.

காட்சி—13

(மார்வாடிக் கடை)

(சென்னையில் பணத்தை இழந்ததால் மதுரை செல்லப் பணத்திற்காகக் கஷ்டப்படுகிறுன் குணசேகரன்)

வியாபாரி : வாங்கோயா...நிம்மிள்கி என்னு வேணும்? சொல்லுங்கோயா?

குண : அய்யா...எனக்கு ஒண்ணும் வேண்டாம் இந்த பேண்டை விலக்கு எடுத்துக்கிடறீங்களா?

வியா : இது ரொம்ப புராணு இருக்காங்க! எட்டு அணு தர்ருங்க.

குண : புதுசய்யா! ஐம்பது ரூபாய் போட்டு தைச்சேன் மதுரைக்குப் போக ணும் ரயில் சார்ஜுக்காவது கொடுங்கையா.

வியா : நீம்பள்—பம்பாய் போருன்—மதருஸ் போருன் நம்பள்கி என்னய்யா. எட்டணு தர்ருன்

(குணசேகரன் நகருகிறுன். ஒரு வீட்டில் போய் பணம் கேட்கிறுன்)

குண : அய்யோ! கப்பல்லே வந்தேன்—பணம் பெட்டி எல்லாம் திருட்டுப் போயிடுச்சி.

வீட்டுக் : பணம் பெட்டியெல்லாம் திருட்டுப் போயிட்டா போலீஸ் ஸ்டேஷனிலே ரிப்போர்ட் பண்ணு.

குண : மதுரைக்குப் போகணும் ஏதாவது...
வீட்டுக் : போ...போ...

(இரவு நேரம் குணசேகரன் ஒரு திண்ணையில் தூங்கிக் கொண்டிருக்கிறான், வீட்டுக்காரன் தண்ணீரைக் கொண்டு வந்து ஊற்றுகிறான் குணசேகரன் மீது)

வீட்டு : ஏண்டா அயோக்கியப் பயலே! யாரைக் கேட்டுடா இங்கே வந்து படுத்தே?

குண : அய்யா...இன்னும் கொஞ்சம் தண்ணி இருந்தா கொண்டு வந்து ஊத்துங்க! குளிச்சு ரொம்ப நாளாகுது கொஞ்சம் சோப்பு இருக்குங்களா?

வீட்டுக் : அட திருட்டுப் பயலே—(மனைவியிடம்) பாத்தியாடி இவன் திமிரை?

குண : அம்மா லட்சுமி மாதிரி இருக்கீங்க! உங்க தம்பியாக இருந்தால் இப்படி பார்த்துக்கிட்டு இருப்பீங்களா?

பெண் : பார்த்தீங்களா! தம்பி முறையில்லா கொண்டாட வந்துட்டான் தடிப்பயல்!

வீட்டுக் : கொண்டாடுவான் இன்னும் கொஞ்சம் கழிச்சா ஒவ்வொரு முறையும் கொண்டாட ஆரம்பிச்சுடுவான். நீ முதலே போயிடு உள்ளே (உள்ளே போகிறாள்) குணசேகரனைப் பார்த்து போடா போடான்னு...

(குணசேகரன் போய் ஒரு பிளாட்பாரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான்)

போலீஸ் : டேய் டேய் டேய் சோம்பேறி பிக்பாக்கட் அடிச்சிட்டு வந்துதானே படுத்திருக்கே என்னடா முழிக்கிறே

குண : தூங்கிறவனை எழுப்பினால் முழிக்காம வேற என்ன பண்ணுவான்?

போலீஸ் : டேய்! நீ பிக்பாக்கட் தானே?

குண : (இரண்டு பைகளிலும் கையை விட்டுத் தடவி) இல்லே யெம்டி பாக்கட்

போலீஸ் : பின்ன ஏண்டா இங்கே வந்து படுத்தே?

குண : இங்கக்கூட படுக்கக் கூடாதா? மாடு செய்த புண்ணியம்கூட இந்த மனிதன் செய்யலேயா? ஆமா! மதுரை ஸிலே மனுஷன் மிருகமாத்தான் இருக்கான்

போலீஸ் யாரையடா சொல்றே?

குண : உங்களைச் சொல்லலீங்க முதுகெலும்பு ஒடிய ஒடிய மூட்டை வண்டி இழுக்கிறானே...குதிரைக்கு பதிலாக நரம்பு தெறிக்கத்தெறிக்க ரிக்ஷா இழுத்துக்கூனிப் போயிருக்

ருனே நாயைப்போல சுருண்டு நடைபாதையில் குடும்பத்துடன் வாழ்கிருனே அந்த நல்ல மனே, நாதியற்றவனே நாலு காலு மிருகத்தைப் போல உழைக்கிருனே அவனே சொல்லுகிறேன். சென்னே புனிதமான நகரம்! அங்கே மனிதன் மிருகம்.

போலீஸ் : நீ மெட்ராசுக்கு மேயராக வர்ற காலத்திலே மிருகத்தையெல்லாம் மனுஷனுக்கு.

குண : ஏன்...இப்பவே எத்தனேயோ மிருகங்கள் மனித உருவத்தில்தானே இருக்கு.

(அந்த இடத்தை விட்டு நகர்கிருன்)

குண : (குழாயைப் பார்த்து)...ஆஹா...கடவுள் தண்ணீரையாவது காட்டினுரே! (தண்ணீர் விழவில்லே) பாரசக்தி உன் மகனின் கதியைப் பார். அவனுக்கு உண்ண உணவு இல்லே. உடுத்த மாற்றுத் துணியில்லே! உறங்க ஒரு இடம் இல்லே! பராசக்தி—

காட்சி—14

(மதுரையில் இட்லி கடை வைத்துப் பிழைப்பு நடத்தும் கல்யாணி வீட்டில் ஓர் நாள்—)

சாப்பிடுபவர் : இன்னியோட மூணு ரூபாய் ஆச்சி நாளேக்குத் தர்றேன்,

(இந்நேரம் கடன் கொடுத்த வியாபாரி வருகிருன்.)

வியாபாரி : ஏ கல்யாணியம்மா! கல்யாணியம்மா கொடுக்க வழி இல்லேன்னு ஏம்மா கடன் வாங்குறே?

கல் : இன்னும் ரெண்டுநாள் பொறுத்துக்குங்க; வாடிக்கைகாரங்க பணம் கொடுத்தவுடனே தர்றேன்.

வியா : அதெல்லாம் முடியாதம்மா; (இந்நேரம் வேணு வருதல்)

வேணு : ஒய்! யாருங்காணும்? தனியாக இருக்கிற பொண்ணுகிட்டே வந்து தகராறு பண்ணுறது? பெரிய மனுஷன் நிக்கறது கண்ணுக்குத் தெரியலே?

வியா : மாப்கரோஜ் மகராஜ்

வேணு : மாப்கரோஜ்—மண்ணுங்கட்டி ரோஜ்—எவ்வளவு காணும் தரணும்.

வியா : பத்து ரூபாய்,

வேணு : இந்தாங்கணும் (ரூபாய் எடுத்துக் கொடுக்கிருன்)

கல் : அண்ணு! நீங்க தரவேண்டாம்.

வேணு : பரவாயில்லே! போயி இட்லி கொண்டு வா!
(கல்யாணி இட்லி கொண்டுவரப் போகிறாள்)

மைனர் : தனியா இருக்கிற பொண்ணுகிட்டே வந்து இப்படியா கலாட்டா பண்றது வெட்கங்கெட்ட நாய்ங்க!

வேணு : ஏன் கல்யாணி இந்த மாதிரி தரந்தெரியா தவன்கிட்டேயெல்லாம் ஏன் கடன் வாங்குகிறே?

கல் : என்ன செய்யுறது அண்ணு? வயிறு வளர்க் கணுமே.

வேணு : அப்படின்னு நான் சொல்றபடி செய்—இப்ப நான் கொடுத்தேன் பாரு பத்து ரூபாய் அதை ரூபாயா தர வேண்டாம். தினம் காலேயிலே ரெண்டு ஆளுக்கு இட்லி கொடுத்திடு. நான் இராத்திரியிலே பலகாரம்தான் சாப்பிட்ற வழக்கம் அதனாலே தினம் இராத்திரியிலே நாலு அணாவுக்கு கொடுத்திடு இந்த பத்து ரூபாய் கழிந்தப்புறம் சொல்லு. அப் புறம் போகப் போக உன் நாணயத்தைப் பார்த்து வேண்டிய பணம் தர்றேன்.

மைனர் : ஆமாம்பா! இந்த மாதிரி ஏழைகளுக்குத் தானப்பா உதவி செய்யணும்.

காட்சி—15—

(சென்னையில் பசியால் துடித்து பைத்தியம்போல் ஒரு பிளாட்பாரத்தில் குணசேகரன் இருக்கிறான்)

பழக் : பழம்... பழம்... ஆரஞ்சு... ஆப்பிள்...பழம் ஏம்பா பழம் வேணுமா?

குண : வேண்டாம்மா! காசு இல்லே.

பழக் : காசு இல்லேயா? அப்படின்னு இந்தாபாரு இதைப் பார்த்துக்கோ! போயி தண்ணி குடிச்சிட்டு வர்றேன்.

(பழக்கூடையை வைத்துவிட்டுப்போகிறாள். குணசேகரன் பழக்காரியை கேளாமலேயே பழத்தை எடுத்துச் சாப்பிடு கிறான்.

பழக் : டேய்! டேய்—ஏண்டா என் பழத்தை எடுத்தே?

குண : பசிக் கொடுமையம்மா!

பழக் : பசிக்குதுன்னு திருடியா திங்கச்சொல்லுது பாழாய் போனவனே...நான் பாடுபட்டு பங்கப்பட்டு நாலு தெரு சுத்தி நாலு காசு சம்பாதிக்க அதைப் பறிக்க வந்துட் டியா?

குண : உன் மகனு இருந்தா மன்னிக்க மாட்டியா

பழக் : உன்னைத் தெய்வந்தாண்டா கேக்கணும்.

குண : அவன் கேட்கலேயம்மா என் வேதனைக் குரலே, அவன் மனசுதான் கல்லாய் போச்சே.

பழக் : என் பழம் எல்லாம் மண்ணுப் போச்சே! உனக்கு எந்த மாரியம்மன் கோயில் மண்ணவாரி இறைப்பேன்? டேய் மரியாதையா பணத்தை எடுத்து வைக்கலே பல்ல உடைச் சிடுவேன்.

குண : பணத்துக்கு எங்கேயம்மாபோவேன். வேணும்னு கூலி இல்லாமல் இந்தப் பழத்தை சுமந்து வித்துத்தாறேன்.

பழக் : வித்தாத்தாரே வீணப்போனவனே? மூஞ்சைப் பாரு அட பழத்தைத் தின்னுட்டு தோலே உரிச்சு அதிலேயே போட்டிருக்கே? தூக்கு அடே தூக்கடா!

(இந்நேரம் ஒருபைத்தியக்காரன் வந்து பழக்கூடையைத் தட்டிவிட்டு பழத்தை எடுத்து ஓடுகிறான், போலீஸ் அவனை விரட்டுகிறது. ஆனால் அவனை போலீசை மிரட்டிவிட்டுச் செல் கிறான். இக் காட்சியைக் கண்ட குணசேகன்)

குண : பைத்தியக்கார உலகம், இந்த உலகத்தில் ஏமாற்றித் திரிபவன்தான் பிழைக்க முடியுமா நான் திருடியது வேட்டி வாங்கிக் கொள்வதற்கா? அல்லது வீடு கட்டிக் கொள் வதற்கா? வயிற்றுப்பசி தாங்கமாட்டாமல் ஒரு பழம் திருடி னேன்...அதற்கு பரிசு அடி, உதை, திட்டு பைத்தியக்காரன் ஒரு சீப்பு பழத்தைத் திருடுகிறான். உலகம் அவனுக்குப் பயப் படுகிறது. அவனை மன்னித்து விடுகிறது. இனி நாமும் வேறு வழியைக் கையாண்டால்தான் பிழைக்க முடியும்.

(இந்நேரம் ரோட்டில் ஒரு பெண் செல்லுகிறாள். இரு மைனர்கள் அவள் செல்லும் அழகைப் பார்த்து)

மைனர் : இவள் நடையே தனி அழகு சார்! இந்த மாதிரி உருப்படி நமக்குப் கிடைக்கணுமே!

வந்த : எல்லாம் பணம் போட்டால் கிடைக்கும் சார்...

(குணசேகரன் மைனர்களை அடித்து)

குண : சிகரெட்...(மைனர்கள் கொடுத்து விடுகின்றனர்) ஹா...ஹா...ஸக்ஸஸ் (இன்று முதல் நானும் ஒரு ஏமாத்துக் காரன்.)

(பைத்தியக்காரன் மூலம் ஏமாத்துக்காரனே பிழைக்க முடியும் என்றபட்டம் பயின்ற குணசேகரன் தானும் ஓர் பைத் தியம் போல் நடித்து ஆடிப்பாடி பலரிடம்பணம் பறிக்கிறான்.)

தேசம், ஞானம், கல்வி, ஈசன் பூசையெல்லாம்
காசுமுன் செல்லாதடி குதம்பாய்
காசுமுன் செல்லாதடி

ஈசனும் ஈசனுர் பூசையும் தேசத்தில்
காசுக்குப் பின்னுலே—குதம்பாய்
காசுக்குப் பின்னுலே
காட்சியான பணம் கைவிட்டுப் போனபின்
சாட்சி கோர்ட்டு ஏருதடி

பை பையாய் பொன் கொண்டோர்
பொய் பொய்யாய் சொன்னலும்
மெய் மெய்யாய் போகுமடி—குதம்பாய்
மெய் மெய்யாய் போகுமடி

நல்லவரானலும் இல்லாதவனே
நாடு மதிக்காது—குதம்பாய் நாடு மதிக்காது
கல்வி இல்லாத மூடரைக் கற்ருேர் கொண்டாடுதல்
வெள்ளிப் பணமடியே—குதம்பாய்
வெள்ளிப் பணமடியே

ஆரியக் கூத்தாடினலும்
தாண்டவக் கோனே—காசுக்
காரியத்தில் கண்வையடா தாண்டவக்கோனே

உள்ளே பகைவையடா
தாண்டவக்கோனே—காசுக்கு
உதட்டில் உறவாடடா தாண்டவக்கோனே

முட்டாபயலியெல்லாம் தாண்டவக்கோனே—காசு
முதலாளியாக்குதடா தாண்டவக்கோனே—காசு
கட்டி அழும்போது
தாண்டவக்கோனே—பிணத்தைக்
கட்டி அழும்போது தாண்டவக்கோனே—பணப்
பெட்டிமேலே கண்வையடா தாண்டவக்கோனே

காட்சி—16

(குணசேகரன் பைத்தியக்காரன்போல் நடித்து சென்னையிலிருந்து மதுரையில் தன் வீட்டுக்கு அருகே வந்து சேருகிருன். அவ்வீடு பூட்டி இருப்பதால் பக்கத்தில் பிச்சை போட்டுக்கொண்டு நின்ற பார்வதியை விசாரிக்கிருன்)

பார் : அட! நீ யாரையா இரு வர்றேன்

குண : இல்லேம்மா, நான் பிச்சைக்காரனில்லே பக்கத்து வீட்டிலே மாணிக்கம் பிள்ளேன்னு ஒருத்தர் இருந்தாரே, இப்ப அவரு எங்கம்மா இருக்காரு!

பார் : யாரு! கல்யாணி அவுங்க அப்பா தானே?

குண : ஆமாம்மா!

பார் : அவரு செத்துப் போயிட்டாரு.

குண : ஆ...செத்துப் போயிட்டாரா? அப்ப அவரு பொண்ணு கல்யாணி?

பார் : கல்யாணி! எனக்கும் பொண்ணு மாதிரிதான்! கடைஞ்செடுத்த சிலமாதிரி இருப்பாள் கல்யாணம் எல்லாம் நல்லாதான் நடந்திச்சி. பாழும் தெய்வம் அவனையும் வாழ விடலே...கல்யாணம் நடந்த மறுவருஷம் அவனோ சிசுவும் கையுமா விதவையாக்கிருச்சி!

குண : ஆ அய்யய்யோ...இப்ப கல்யாணி எங்கம்மா?

பார் : அதோ அந்நத் தெருக்கோடியிலே இட்லி கடை வச்சிருக்கு. இப்படித் துயரப்படுறியே நீ யாரு?

குண : நான் யாருன்னு சொன்னால் உங்களுக்குத் தெரியாதம்மா.

(கல்யாணியைத் தேடி தெருக்கோடி வீட்டுக்கு செல்கிறான் குணசேகரன்)

காட்சி—17

(கல்யாணி தன் குழந்தையை தொட்டிலில் போட்டுப் பாடிக்கொண்டிருக்கிறாள். இதைப் பார்த்துக்கொண்டே கண்கள் கடலாக நெஞ்சைத் துளைக்கும் சோகத்தோடு நிற்கிறான் குணசேகரன்)

கொஞ்சும் மொழி சொல்லும் கிளியே—செழும்
கோமளத் தாமரைப் பூவே—ஒரு
வஞ்சமிலா முழுமதியே இன்ப
வானில் உதித்த நல்லமுதே!
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

மாமன்மார் மூவர் தம்பி—நல்ல
வாழ்வளிக்க வருவார்
உன் மாம்பழக் கன்னத்தில்—முத்த
மாரி பொழிந்திட வருவார்
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

மாணிக்கப் பாலாடை—பச்சை
மாமணித் தொட்டிலுடன்—வெள்ளி
யானையும் வாகனமாய்—சின்ன
மாமன் தருவார் சீதனமாய்
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

வெள்ளியினுல் செய்த ஏட்டில்—நல்ல
வைர எழுத்தாணி கொண்டு
தெள்ளு தமிழ் பாடம் எழுத உனை
பள்ளியில் சேர்த்திட வருவார்—மாமன்
அள்ளி அணைத்திட வருவார்
கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ

(பாடலின் கருத்து அவன் வருத்தத்தைப் பன்மடங்கு வளர்க்கிறது)

ஆம். மாமன்மார்கள் ஆடம்பரமாக வருவார்கள்...கல்யாணி உன் ஆசைக்கனவை நான் அழிக்க வேண்டாம். இந்தப் பைத்தியக்கார வேஷத்தில் நீ என்னைக் கண்டு கொள்ளவே வேண்டாம்—(இது குணசேகரனின் மனசாட்சி)

குண : கடலிலே திசை மாறிப்போன கப்பல் அப்படியே கவிழ்ந்தே போயிருக்கக் கூடாதா? கல்யாணி உன்னை இந்த நிலையில் காணவா இவ்வளவு ஆவலோடு ஓடிவந்தேன். (சுமைதாங்கி அருகே செல்கிறான்) சுமைதாங்கி இனி இதுவே என் சோகம் தாங்கி! இதுவே என்வீடு! இங்கேயே என்வாழ்வு! கல்யாணியை நிழல்போல பின்தொடர்ந்து கொண்டிருப்பது என் உத்தியோகம்.

காட்சி-18

(மைனர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றனர்)

1வது : திருப்பப்பா
2வது : மூணு ராஜா தம்பி
1வது : எனக்கு மட்டும் மூணு ஆஸ் இருந்தால்
வேணு : ஒரு லாண்டறியே வச்சிருவே

1வது : என்னப்பா சிரிக்கிறீங்க? நான் ஆட்டத்துக்கு வர்லே.

வேணு : ஏது ஆள் அவுட்டா...சும்மா கெடப்பா போன காசையெல்லாம் திருப்பிடலாம்.

1வது : ஏண்டா அதற்குக்கூட காசு வேணுமே! ஏய்...நீ வச்சிருந்தால் கொடுக்கமாட்டியா? ஏய் ஒரு டேபின் மட்டும் கொடப்பா

வேணு : பைசா நஹி! என்னப்பா...இரும்புப் பெட்டி சாவியை ஒங்க அப்பா ஒன்கிட்டே கொடுத்திருக்காரு பயப் பட்றியே...

1வது : சாவிதானே...எனக்கு அடிக்கடி காக்கா வலிப்பு வர்றது வழக்கம் அதனுலே கொடுத்திருக்காரு.

வேணு : ஏய்—அங்கே வர்றியா போவோம்...
1வது : எங்கே?
[மைனர் வேணுவால் அழைத்துச் செல்லப்படுகிறான்]

காட்சி 19

[பைத்தியம்போல் வேணுமென்றே பிதற்றிக் கொண்டிருக்கிறான்]

குண : கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்... குடிக்கத்தான் கற்பித்தானு? (சிரிக்கிறான் நானே மகாராஜன் இல்லை சந்தேகம்—யாரவர்கள், மந்திரி பிரதானிகளே வருக இவ்வாசனத்தில் அமருங்கள்! பரத நாட்டியம் ஆரம்பமாகட்டும் டுமீர் டுமீர்!

கோபாலனெடு நான் ஆடுவேனே—நந்த
கோபாலனெடு நான் ஆடுவேனே—வேணு
கோபாலன்—ஆ நந்தகோபாலன்—ஊ நந்த
கோபாலன்
இசைக்குயில் போல ஆடுவேனே

ஐயோ! ஐயோ! போதும் போதும்! தேச விசாரணை ஆரம்பமாகட்டும் டும் டும் டும்! மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? டுமீர்! டுமீர்! அதுக்குத்தான் வருண பகவானுக்கு 'கடக்கட்டு' கட்டி தந்தி அடிச்சிருக்கோம் மகராஜ்! சபாஷ் சபாஷ்! யார் அவர்கள்? ஏன் கத்துகிறார்கள்? ஓய் ஓய் மகாராஜா வயிறு பசி தாங்கல்லே—குடும்பம் குடும்பமாக சாகிறோம். வாட் வசிக்குதா? அப்படிச் சொல்லாதே பாவி! பவுன் விளையுற நாடுடா! பரதேசிப் பசங்களா பட்டினி கிடக்கிறீங்களா? சாவுங்க சந்தோஷமாக சாவுங்க! அப்பத்தாண்டா வால் நட்சத்திரம் கிளம்பும். சர்—சர்—ர் மகராஜ் பணம் இல்லையா? வேர் யு ஆர்! வேறே வாட் யு வாண்ட்? வடமலையானுக்கு காவடி எடுங்கடா—வடமலையானுக்கு... (ஒரு செங்கல்லை எடுத்து) அரோகரா சர்வராம சஞ்சீவி நாம பர்வதம் ராம சங்கீர்த்தனம்...கோவிந்தா... ஹரே கோவிந்தா!

(கல்லை சுமைதாங்கி மீது வைத்துக்கொண்டு)

நட்டகல்லை தெய்வம் என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணன்னு சொல்லும்
மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்—சுட்ட
சட்டி சட்டுவங் கறிச்சுவை அறியுமோ?

பஜனே செய்வோம் கண்ணன் நாமம் பட்டினிகிடந்து
பஜனே செய்வோம் கண்ணன் நாமம்
பஜனே செய்வோம் கண்ணன் நாமம்-பட்டினி கிடந்து
பஜனே செய்வோம் கண்ணன் நாமம்

(இவ்வாறுக பைத்தியக்காரனைப் போல் பல வேஷத்தில் பல பேச்சுக்களை பேசும் குணசேகரனைக் கண்ட கல்யாணி)

கல்யாணி : அய்யோ—பாவம்—யாரோ பைத்தியம்—போல்இருக்கு.

குண : தங்கச்சி தங்கச்சி இங்கே வாயேன்.

கல்யா : என்ன? அப்பா நான் உனக்கு தங்கச்சியா?

குண : ஆமா! நான் உன்கிட்டே ரெண்டு மூணு நாளா ஒண்ணு சொல்லலாம்னு நினைச்சேன்.

கல் : என்ன?

குண : ஒண்ணுமில்லே நான் ஒரு பொண்ணு பெத்து தர்றேன் உன் பையனுக்கு கட்டிக்கிருயா?

கல் : அது சரி சீதனம்?

குண : அது அப்புறம் பார்த்துக்கிடலாம் முதல்லே என் மாப்பிள்ளையை கொஞ்சம் கொடு—ஒரு முத்தம் கொடுத்துட்டு தர்றேன்.

கல் : அய்யோ—நான் மாட்டேன்.

குண : தங்கச்சி ஒண்ணே ஒண்ணு! தரமாட்டியா? தங்கச்சி சத்தியமா—நான் பைத்தியக்காரனில்லே உன் பிள்ளையை ஒண்ணும் செய்யல்லே கொடுக்கமாட்டியா? ஆம் நான் பைத்தியக்காரன்தான் (தாளா துயரத்தோடு சென்று விடுகிறான்)

காட்சி 20

(இடம் ரோடு)

வியா : வடை! முறுக்கு! அய்யா! முறுக்கு வேணுமா?

குண : மூணு அணாவுக்கு கொடு

வியா : அட கடவுளே! போணி ஆயி மூணு நாள் ஆகுது வடை எவ்வளவுக்கு முறுக்கு எவ்வளவுக்கு?

குண : அட ரெண்டு அணாவுக்கு இதுவும் ஒரணாவுக்கு அதுவும் கொடப்பா! (கொடுக்கிறான்)

வியா : ஏம்பா உன் கை நல்லா நடக்கும்லே?

குண : கை நடக்காது—கால் நடக்கும் (என்று செய்கை மூலம் காட்டுகிறான்)

வியா : அய்யோ—பாவம் பசி அதிகம் போலிருக்கு? சாப்பிடு சாப்பிடு!

அடுத்த : ஏ...முறுக்கு

வியா : இருங்க அய்யாகிட்டே காசு வாங்கிட்டு வர்றேன் காசு எடப்பா—உம்—காசு எடு—

குண : (சிரிக்கிறான்)

வியா : ஏனப்பா சிரிக்கிறே?

குண : (மீண்டும் சிரிக்கிறான்)

வியா : அட! என்னப்பா மறுபடியும் சிரிக்கிறே காசை எடு நாலு தெருவுக்கு போகணும்.

குண : ஏன் பொறுக்கவா?

வியா : யாரடா இவன் திமிறுபடைச்சவன் காசு எடுன்னு.

குண : டேய்!—காசா? உனக்கா? எதுக்கு?

வியா : ஏம்பா மாமா மச்சான் மாதிரி விளையாடுறே. என்னே ஏமாத்தலாம்னு பாக்றயா என்னே யாருனு நினைச்சே!

குண : அப்படின்னு இன்னும் ரெண்டணாவுக்குக் கொடு.

வியா : அப்படி வா வழிக்கு! இந்தா வாங்கிக்கோ? (கொடுக்கிறான்—சாப்பிடுகிறான்) காசு எடப்பா—ம்—நேரமாகுது.

குண : (பைத்தியம்போல்) அடடா பயலே—

(வியாபாரியை விரட்டி விட்டுப் பெட்டியைத் தான் தூக்கிக்கொண்டு புறப்படுகிறான்)

குண : முதலாளி முறுக்கு வேணுமா?

முத : சூடா இருக்கா?

குண : ரெண்டும் இருக்கு

முத : அப்ப எனக்கு இதிலே ஒரணாவுக்கு அதிலே ஒரணாவுக்கு கொடு.

குண : காசை எடு.

முத : அட முதல்ல கொடப்பா

குண : ஏங்க உங்களுக்கு ரெண்டணாவுக்கு போதுமா?

முத : போதாது! காசை ரொம்ப செலவழிக்க கூடாது ஏம்பா ரெண்டு அணாவுக்கு வாங்கியிருக்கேனே கொஞ்சம் ஓசி

குண : அய்யோ இதிலே கூட உங்க பிச்சைக்கார புத்தி போகலீயா! இந்தா ஓசி, (கொஞ்சம் பிட்டுக் கொடுக்கிறான்) காசை எடு.

முத : காசா? ரூபாய்க்கு சில்லறை இருக்கா?

குண : என்ன?

முத : ஒரு ரூபாய்க்கு சில்லறை இருக்கா?

குண : சில்லறையா? எங்கிட்டேயா? அட பாவி கொண்டா. (ரூபாயை வாங்கி கையில் வைத்துக்கொண்டு) நல்ல சமயமடா இதை நழுவ விடுவாயோ—ஏதுங்காணும் இந்தக் காசு?

முத ஏதுங் காணும் இந்தக் காசா?

குண : டேய் 'எய்ட் நாட்திரீ' கொண்டு போடா இந்தக் கொட்டாபுளியை [ரூபாயுடன் ஓடி விடுகிறான்]

முத : சரிதான் பெட்டி இருக்குதல்ல

[வியாபாரி வந்து பெட்டியைத் தூக்குதல்...முதலாளி தூக்கவிட மறுத்தல். வியாபாரி பெட்டியைத் தூக்கி முதலாளியின் தலை மீது வைத்தவுடன் போலீஸ் வந்து பிடித்துக்கொண்டு போதல்]

காட்சி 21

[காமவெறி பிடித்த கருநாகம் வேணு, கல்யாணி என்ற கனியைச் சுவைக்கும் நோக்கத்தோடு கல்யாணியின் வீட்டுக் கதவைத் தட்டுகிறான்.]

வேணு : கல்யாணி!

கல் : [கதவைத் திறந்தவுடன்] ஏண்ணு இவ்வளவு நாழி? இனிமேல் சீக்கிரமா வந்துடுங்க.

வேணு : வரவேண்டிய நேரத்திலேதானே வந்திருக்கேன் ஏன் கல்யாணி இன்று வியாபாரம் எப்படி?

கல் : என்றைக்கும் போலத்தான் இன்னிக்கும்

வேணு : ம்...இட்லி இருக்குல்லே?

கல் : இருங்கண்ணு! கொண்டு வர்றேன்

வேணு : ஏன் கல்யாணி! அரிசி கிடைக்காத நேரத்திலே இப்படி தனி அரிசியாய் போடாமல் கொஞ்சம் கோதுமையைச் சேர்த்தால்—

கல் : சேர்க்கலாம் ஆனா ருசி கெட்டுடும்

வேணு : எதுவும் தனிமையாக இருக்கிறதைவிட இரண்டாக இருந்தால் நல்லா இருக்கும். கோதுமையும் கலந்துகிட்டால் லாபமும் அதிகம் இருக்குமே!

கல் : லாபத்துக்காக அக்கிரமம் செய்யலாமா அண்ணு?

வேணு : என்னடி மூச்சிக்கு முப்பத்திரண்டு அண்ணு போட்ற?

கல் : அண்ணு! எனக்கு மூன்று அண்ணன்மார்கள் உண்டு அவர்களில் ஒருவரைக்கூடப் பார்க்க கொடுத்து வைக்காத பாவியானேன்! ஆசைக்கு உங்களையாவது அண்ணு அண்ணன்னு கூப்பிட்றேன்

வேணு : அட பைத்தியமே ஆசை அதிகமாயிட்டா அதுக்கு அண்ணன்னு கூப்பிட்றது?

கல் : அண்ணு! உங்கள் பேச்சில் விபரீதமிருக்கிறதே?

வேணு : ஆசையைக் காட்டிக்கொள்ளும் வழி அது வல்ல கல்யாணி!

கல் : அண்ணு தனியாக இருக்கும் பெண்களிடம் இப்படிப் பேசுவது—

வேணு : ஆமா! தளிர்க்கொடி தனியாக இருக்கக் கூடாதுன்னுதான் படர்வதற்கேற்ற பலாமரமாக நான் இருக்கிறேன். மாமான்னு கூப்பிடு! அது எவ்வளவு மனோகரமான வார்த்தை! அத்தான்னு கூப்பிடு அது எத்தனை சத்தான மொழி.

கல் : நிறுத்து இனி என்னால் பொறுக்க முடியாது.

வேணு : இங்கே என்ன வாழுதாம்! நானும் அப்படித்தான் நீ சரின்னு சொல்லு. ஒலிக்குடிசை இருக்கும் இடத்திலே உப்பரிகை கட்டித் தருகிறேன். கந்தல்பாயிலே படுத்த கல்யாணி கனகமணிக் கட்டிலிலே படுப்பாள்.

கல் : சீ நெருங்காதீர்கள்! வறுமையால் வாடும் பெண்கள் வஞ்சக வக்கீல்களால் விழுவதுண்டு! ஆனால் நீங்கள் எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர்கள்?

வேணு : போர்க்களத்திலே ஒப்பாரி! போகக் களத்திலே புலம்பல் கோழைகள் செயலடி என் கோமள நாயகி

கல் : என்னைத் தொட முயன்றால் சப்தம் போடுவேன்

வேணு : போடு! உன் சப்தம் எனக்கு சங்கீதமாதான் இருக்கட்டும்.

[என்று கல்யாணியைக் கட்டி அணைத்து அவள் செவ்விதழைச் சுவைக்கப் போகிறான், காம வெறியன் கயவன் வேணு, இந்நேரம் குணசேகரன் வந்து...)

குண : மரியாதை வேண்டாமடா, மைத்துனு [என்று வேணுவை அடித்து விரட்டுகிறான்]

கல் : நீ வரலின்னு என்கதி என்ன ஆகியிருக்கும்! கிறுக்கண்ணு நீ எங்கே இங்கு வந்தே

குண : உன்னைப் பார்க்கத்தான்

கல் : கிறுக்கண்ணு பத்துநாளா அந்த மரத்தடியிலே என்ன செய்யுறே!

குண : ராஜாங்கம் நடத்துறேன்

கல் : கிறுக்கண்ணு இட்லி தர்றேன் திங்கிறியா?

குண : ம்...நீ காசு கேட்பியே

கல் : காசு வேண்டாம்

குண : நான் யாருன்னு சொன்னு நீ காசே கேட்க மாட்டே

கல் : நீ யாரு?

குண : நானு...நானு மரத்தடி மகாராஜா!

கல் : இட்லி கொண்டு வர்றேன்

குண : வேண்டாம்... வேண்டாமம்மா... இட்லி வேண்டாம்மா...சட்னி வேண்டுமம்மா...

கல் : சரி ரெண்டும் கொண்டு வர்றேன் (போகிறாள்)

(குணசேகரன் பின்னால் சென்று தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் தன் மாப்பிள்ளைக்கு முத்தமிடுகிறான் அவன் கண்களில் கண்ணீர்)

கல் : (இட்லியுடன்) ஏன் கிறுக்கண்ணு அழறே

குண . உம்.....என் ராஜங்க பிரஜையெல்லாம் சந்தோஷமாக இருக்காங்க...அதனாலே நான் அழறேன்.

(என்று தன் கையிலிருந்த ரூபாயை இட்லித் தட்டில் போட்டு விட்டுப் போய்விடுகிறான்)

கல் ! கிறுக்கண்ணு! கிறுக்கண்ணு!

காட்சி—22

மறுநாள் காலை மைனர்கள் சிலர் கடையொன்றின் முன் நின்று அரட்டை அடிக்கின்றனர். அவர்களுக்கு அருகில் குணசேகரன் பல் துலக்கிக்கொண்டிருக்கிறான். அப்போது—)

1—வது : எங்கடா இராத்திரியெல்லாம் ஆளையே காணோம்.

2—வது : இராத்திரியெல்லாம் ஒரே சீட்டாட்டம் கண்ணெல்லாம் எரியுது!

1—வது : அட கண்ணுதான் எரிஞ்சுது! காசாவது கிடைச்சுதா? இம்...அதுதானே இல்லே.

2—வது : எங்கடா வேணுவை? ஆளையே காணோம்.

1—வது : ஆள் மஞ்சமெத்தையிலே படுக்க போயிருச்சி அவதான் இட்லிகாரி கல்யாணி இல்லே! அவள் கிட்டே நம் மப்பயல் வாலை ஆட்டியிருக்கான்...பாச்சா பலிக்கலே...நல்ல அடி கொன்னுட்டான் பாவம்.

1—வது : டேய் சும்மா இருடா! நீ வேற ஏண்டா ஓடம்பை வீணு அலட்டிக்கிட்டே? எவனே பைத்தியக்கார வேசத்திலே திரியுறனும் கல்யாணிக்குக் கள்ளப்புருஷனும்...

(இதைக் கேட்ட குணசேகரன் ஆத்திரத்துடன்)

குண : (மைனர்களை அடித்து) என்ன சொன்னே, என் கல்யாணிக்கா களங்கம்? கல்யாணி என் தங்கையடா என் தங்கை! இப்போதேபோகிறேன் நான் யாரென்பதை சொல்லி விடுகிறேன்.

(தங்கை வீட்டை நோக்கி வெறிகொண்டு ஓடுகிறான்)

(குடிசையில் கல்யாணியைக் காணுமல்)

குண : சந்தர்ப்பம் என் தங்கையை விதவையாக்கியது சமுதாயம் அவளே வாழவிடவில்லே (கல்யாணியைக் காணுது திரும்புகிருன் வரும் வழியில்)

குண : அய்யா இந்தப் பக்கம் ஒரு குழந்தையோட ஒரு விதவை...

வழிப் : அடே அது உனக்கு தெரிஞ்ச பொண்ணுதானு? அதோ அந்தக் கூட்டத்திலே போயி பாரு தற்கொலே பண்ணிக்கிட்டாங்க.

குண : ஆ—கல்யாணி, (அங்கே செத்துக் கிடக்கும் பெண் கல்யாணி அல்ல என்பதை அறிந்து திரும்புகிருன்)

[கல்யாணி மதுரையில் இட்லி வியாபாரத்தை விட்டு ஊரை விட்டே வெளியேறுகிருள்]

காட்சி—24

(இரங்கூனிலிருந்து வெளியேறிய சந்திரசேகர் திருச்சியில் எம். சி. சேகர் என்ற பெயருடன் நீதிபதியாக இருக்கிருர்)

வந் : ஏதாவது தகவல் கிடைத்ததா?

ஒரு : ஒரு தகவலும் கிடைக்கல்ல!

வந் : ஆமாம் நீங்க இந்த ஊருக்கு வந்தது அவர்களுக்குத் தெரியுமா?

சந் : தெரியாது!

சரஸ் : எதற்கும் நாம் நேரிலேயே பார்த்துவிட்டா?

சந் : ஆம் அதற்காகத்தான் அவர்களே வரச்சொன்னேன் நாமாக்கே புறப்படுவோம்.

காட்சி—25—

கள்ள மார்க்கெட் கயவன் நாராயணப்பிள்ளே பதுக்கி வைத்திருந்தவற்றைக் கணக்கிடல்]

நாரா : சர்க்கரை மூட்டை, இருபது, மில் துணி பீஸ் முப்பது, நூல் பேல் ஆறு, ஆக மொத்தம்.

கருப் : அம்பத்தாறு

நாரா : சீ மடையா அதுதெரியாது எனக்கு! லாபத்தைக் கணக்குப் பண்ணினுல், ஐம்பத்தாரும்

கருப் : லாபம் என்னங்க, இப்பவே வித்தால்கூட முப்பது ஆயிரம் கிடைக்குங்க.

நாரா : ஏன் அப்புறம் வித்தால் ஆகாதோ? இது ஒண்ணும் கத்தரிக்கா இல்லேடா அழுகிப்போகறதுக்கு கன்னிப் பொண்ணு.

காந் : கன்னிப்பெண்ணைக்கூட விக்க ஆரம்பிச்சுட்டீங்களா?

கருப் : விக்கலாம் அம்மா! ஆனால் அதை இந்த மாதிரி மூட்டையாக கட்டிப்போட முடியாதே.

நாரா : சும்மா இருடா மடையா.

காந் : ஏன்...இவரு ப்ளாக் மார்க்கட்ல பூதத்தைக்கூட மூட்டையாகக் கட்டிப் போட்டுருவாரே.

நாரா : அப்படிக் கட்டிப் போடாமலா உன் கழுத்திலே தாலியைக் கட்டினேன்! நீ ப்ளாக் மார்க்கட்ல கேவலமா பேசறே எல்லாம் பணம்தான். ஔவையார் கூழுக்குப் பாடினாள், கம்பர் பொன்னுக்குப் பாடினாரு, இதுவும் ப்ளாக் இல்லாமல் வேறு என்ன?

(இந்நேரம் தமிழ்ப் பண்டிதர் வருதல்)

நாரா : என்ன தமிழ்ப் பண்டிதரே.

சி. ஐ. டி. நாராயணப்பிள்ளைவாள் நான் இப்பொழுது தமிழ்ப் பண்டிதரல்ல. துப்பறியும் இலாகாவில் பணியாற்றுகிறேன். உங்களிடம் நிறைய நூல் இருப்பதாக கேள்விப்பட்டேன்.

நாரா : அரகரா, அது யாருங்க சொன்னது? என்னண்ட நூல் இருக்கிறதா. நான் ஒரு நாணயமான வியாபாரி ஊருக்கு பெரிய மனுஷன்! சன்மார்க்க சங்கத்துக்கு தலைவன்.

கருப் : திருட்டுப் பயல்க!

நாரா : யாருடா திருட்டுப் பயல்க?

கருப் : முதலாளி கிணற்றுக் கரையிலே நாலு அணைவைச் வச்சிருந்தேன். எவனே அடிச்சிட்டுப் போயிட்டான்.

நாரா : போடா மடையா.

சி. ஐ. டி. அமைதி அமைதி, நாராயணப் பிள்ளைவாள் நான் குறிப்பிடுவது ஆடை நெய்யும் நூல் அல்ல; அறிவு வாடை வீசும் நூல், புத்தகம்.

நாரா : புத்தகமா? சரிதான் சி. ஐ. டி. சார்! எங்கிட்ட ஏராளமான புத்தகம் இருக்கு! டேய் கருப்பா அய்யா கேக்குற புத்தகத்தையெல்லாம் போயி கடையிலே வாங்கிக் கொண்டு வந்து கொடு தெரிஞ்சுதா? அப்போ புறப்படுங்கோ நேரம் ஆகுது.

சி. ஐ. டி. : நன்றி வணக்கம்

நாரா : சந்தோஷம்

(இந்நேரம் மதுரையை விட்டு வெளியேறிய கல்யாணி திருச்சிக்கு வந்து நாராயண பிள்ளையின் வீட்டு வாசலருகே பசியால் துடித்து நிற்கிறாள்)

கல் : ஐயா நானும் குழந்தையும் பட்டினி ஏதாவது

நாரா : ஏம்மா இந்த இளம் வயதிலேயே பிச்சை எடுக்க ஆரம்பிச்சுட்டியே நீ யாரு?

கல் : நான் ஒரு அனுதையா ஏதாவது ஒரு வீட்டுவேலை கிடைச்சாலும் போதும்.

நாரா : அப்போ இங்கே வேலை பாக்குறியா?

கல் : தயாராய் இருக்கேனய்யா

நாரா : டேய் கருப்பா உள்ளே கூட்டிக்கிட்டு வாடா

காட்சி—26

(மதுரையில் கல்யாணியைக் காணமல் திருச்சி வந்து சேரும் குணசேகரன் ரெயில்வே ஸ்டேஷன் அருகில் இருக்கிறான். அச்சமயம் ரெயிலில் வந்த விமலா என்ற பெண்ணின் சாமான்களைக் கூலிக்குத் தூக்கி வருவதாக எடுத்துக்கொண்டு ஓடுகிறான். சிலர் அவனை துரத்தவே ஆகாரத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு ஓடுகிறான். (தன் பசியின் கொடுமையை அகற்ற)

(ஆகாரத்தை திருடி வந்தவன் விமலா வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தின் கிணற்றங்கரையில் அமர்ந்து ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டே பாடுகிறான்)

கா—கா—கா—கா—
ஆகாரம் உண்ண எல்லோரும் ஒன்றுக
அன்போடு ஓடிவாங்க என்ற
அனுபவப் பொருள் விளங்க—காக்கை
அண்ணனே நீங்கள் அழகான வாயால்
பண்ணைக் பாடுறீங்க—கா கா என
ஒண்ணுகக் கூடுறீங்க—வாங்க (கா
சாப்பாடு இல்லாம தவிக்குதுங்க—ஜனம்
கூப்பாடுபோட்டு மனம் குமுறுதுங்க—உயிர்
காப்பாத்த கஞ்சி தண்ணி ஊத்துங்க என்றுல்
தாப்பாகூப் போடுறுங்க பாருங்க—அந்த
சண்டாளர் ஏங்கவே—தன்னலமும் நீங்கவே
தாரணி மீதிலே பாடுங்க ராகம் (கா

எச்சிலை தனிலே எறியும் சோத்துக்கு
பிச்சைக்காரர் சண்டை—ரோட்டிலே
இனைத்தவன் வலுத்தவன்
இனச்சண்டை பணச்சண்டை
எத்தனையோ இந்த நாட்டிலே
பட்சி சாதி நீங்க—எங்க
பகுத்தறிவாளரைப் பார்க்காதீங்க
பட்சமாயிருங்க பகிர்ந்துண்டு வாழுங்க
பழக்கத்தை மாத்தாதீங்க—எங்கே பாடுங்க (கா

(விமலா பாடலின் கவர்ச்சியால் இழுக்கப்பட்டு அங்கு வர அவனைக் கண்டு குணசேகரன் பயந்து ஓடுகிறான்! அவள் அவனுக்கு ''புதுமைபித்தன்'' என்ற பட்டம் சூட்டுகிறாள்)

காட்சி—27

[சந்திரசேகரன் வீட்டில்]

சேகர் : அப்பா இறந்துபோய் விட்டார் கடைசியாக என் தங்கை இட்லிசுட்டு விற்க வேண்டியதாயிற்று. ஞான சேகரன் இறந்ததை நினைக்கும்போது பயமாக இருக்கிறது.

வந்த : அவுங்க போட்டோ இருக்கா?

சேகர் : கல்யாணி போட்டோ இல்லை ஆனால் குண சேகரன் போட்டோ இருக்கு.

காட்சி—28

(கள்ள மார்க்கட்காரன் நாராயணபிள்ளை என்ற பசுத் தோல் போர்த்திய புலி தன் சூழ்ச்சியான நயவஞ்சக நாட கத்தை ஆரம்பிக்கிறான்)

காந்தா : ஏது இவ்வளவு புத்தகம்.

நாரா : எல்லாம் அந்த சி. ஐ. டி. பண்டிதருக்குத்தான். அவன் நம்ம வீட்டிலே இருந்த கந்த புராணத்தில் இருந்து ஸ்ரீவள்ளி சினிமா பாட்டு புத்தகம்வரை படிச்சுட்டான். இப்ப என்னென்னமோ வந்திருக்கு. குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, ரங்கூன் ராதா, இலட்சிய வரலாறு எல்லாம் ஐம்பது ரூபாய் ஆய்ச்சு...ம் கல்யாணி...காந்தா—சொல்ல மறந்துட்டேனே இன்னிக்கு ஒரு புது படம் ரிலீஸ் ஆயிருக்கு. பெயரு கிருஷ்ண லீலா—

காந் : வாங்களேன் செகன்ட் சோவுக்குப் போகலாம்.

நாரா : நான் பார்த்துட்டேன் மாட்னிஷோவே. நீ போய் பார்த்துட்டு வா.

காந் : நானுக்குப் போறேன்

நாரா : அடா போயேன். விஷயம் இல்லாமல் சொல்ல மாட்டேன். அதிலே லவ்சீன் ரொம்ப பிரமாதம், நான் பார்த்துட்டேன் நீ போயிட்டு வர்றியா?

காந் : சரி நான் போயிட்டு வர்றேன்.

நாரா : ஹூம்—போ—டேய் கருப்பா அம்மாகூட போயிட்டு வாடா—

கருப் : அப்ப நானும் கூட போகட்டுங்களா?

நாரா : அட போடா மடையா!

(காந்தாவும் கருப்பனும் சினிமாவுக்குப் போகின்றனர்)

நாரா : [தனக்குள்] அப்பாடா தொல்லைஞ்சது சனியன். ஆபத்பாந்தவா! அப்பனே! கல்யாணி விஷயத்தில் கொஞ்சம் கருணை காட்டேன். நீ யார் யாருக்கோ என்னென்னமோ பண்றியாமே! கல்யாணி! கல்யாணி!

கல் : ஏன் எஜமான்?

நாரா : காந்தா அவபாட்டுக்கு சினிமாவுக்குப் போயிட்டா. அந்தக் தண்ணூடியைக் கொஞ்சம் எடேன். செகன்ட்ஷோ...மண்ணுங்கட்டி பன்னிரண்டு மணிக்குத்தான் வருவாள். இனிமேல் எடுக்கிறதுக்கெல்லாம் உன்னைத்தான் கூப்பிடனும்—உனக்குப் படிக்கத் தெரியுமா?

கல் : தெரியும்.

நாரா : பலே, பலே அப்படின்னு இந்த புத்தகங்களை எல்லாம் படி!

கல் : சரி எஜமான்—.

நாரா : "விதவையின் காதல்"

கல் : ஆ!...[திகைக்கிறுள்]

நாரா : அப்படி ஒரு புத்தகம். யாரோ பாரதிதாசனும் விதவையைப் பற்றி சொல்லியிருக்கான் பாரு

கோரிகையற்று கிடக்குதண்ணே—இங்கு
வேரிற் பழுத்த பலா
விதவைக்குக்கூட காதல் உண்டாம்
பாடாத தேனீக்கள் உலவாத தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்தது உண்டா?

கல் : சரி எஜமான் எனக்கு தூக்கம் வருகிறது.

நாரா : எனக்கு தூக்கம் வரலேயே? கல்யாணி உனக்கு எதிர்பாராத முத்தம் வேணுமா?

கல் : ஆ [திடுக்கிடுகிறுள்]

நாரா : அதுவும் ஒரு புத்தகம்தான். என்னென்னெல்லாமோ வந்திருக்கு. நானும் இப்பத்தான் பார்க்கிறேன்.

இந்த ரயில்லேயும் கார்லேயும் போயிட்டு வந்தது உடம்பெல்லாம் வலிக்குது கல்யாணி உடம்பை கொஞ்சம் பிடிச்சி விட்றியா?

கல் : கண்ணீர் விடுகிறுள்)

நாரா : பைத்தியம்! ஏங் கல்யாணி! அடஅது ஒண்ணும் வேண்டாமம்மா? அந்தத் தலையணையைக் கொஞ்சம்எடேன்.

(எடுத்து வரும்போது கல்யாணியின் கையைக் காமவெறியால் பிடித்து இழுக்கிறுர்)

கல் : எஜமான் ஒங்க தரத்துக்கு இது அழகல்ல நீங்க பெரிய மனுஷர்!

நாரா : அதுதான் அப்படி நடக்கிறேன். ஒரு பெரிய மனுஷன் நம்ம மேலே பிரியமாயிருக்காருன்னு நீ பெருமைப் பட வேண்டும்.

கல் : எஜமான்! நான் நினைத்தால் உங்கள் வீட்டு வேலைக்காரியாக அல்ல---சீமாட்டியாக இருந்திருப்பேன்.

நாரா : இப்போதுதான் என்னா கெட்டாப்போச்சி! கல்யாணி ஒரு கன்ன ஜாடை! உன்விழியை அசைத்தால் போதும் பிறகு உன் காலடியில் அடிமேன் சிரஞ்சீவி அடிமை.

கல் : சீ...காமப் பேயே!

நாரா : என் உப்பை தின்னுட்டு எனக்கே துரோகமா?

கல் : உங்கள் உப்பு என் உழைப்புக்குத்தான் ஊடலுக்காக அல்ல. நான் உங்கள் வீட்டில் வேலை பார்க்கும் தொழிலாளி.

நாரா : பெரிய மனுஷர்களது அந்தப்புரத்திலே தொழிலாளி முதலாளி என்ற பிரச்சனைக்கே இடமில்லே.

கல் : என்னைத் தொடமுயன்றுல் என் பிணத்தைத்தான் பார்ப்பீர்கள்.

நாரா : அப்படியாவது உயிரை விடு. சுடுகாடுவரைக்கும் தொட்டுக்கிட்டாவது வர்றேன். கல்யாணி நீதான் என்இன்ப எஜமானி.

(என்று கல்யாணியை கட்டி அணைக்கப்போகிறுர்)

கல் : அய்யோ அம்மா...(காந்தா வந்துவிடுதல்)

காந் : நல்லா இருக்கு ஒங்க லட்சணம்...ஊருக்குப் பெரிய மனுஷன்! என்னைக் கிருஷ்ண லீலாவுக்கு அனுப்பிவிட்டு இங்கே நாராயண லீலாவா நடத்துறீங்க, வேலைக்காரிகிட்டேயே ஆரம்பிச்சாச்சா? உம்மைப் பற்றித்தான் ஊர் சிரிப்பாச் சிரிக்குதே!

நாரா : சினிமாவுக்குப் போனவ நீ எங்கடி இங்கே வந்தே.

கருப் : அம்மா பாதியிலே வந்துட்டாங்க எஜமான்.

காந் : எனக்குத்தான் இந்த நாராயணப் பிள்ளே சங்கதி தெரியாதா? அதுதான் அடுத்த வீட்டு எதிர்வீட்டு பொம்பளே கள் கூட வரப் பயப்படருங்களே!

நாரா : அவுங்க எதுக்கடி இங்கே வர்ருங்க!

காந் : ஆமா! ஒங்க அக்கா தங்கச்சியை ஒருவன் இப் படி கையைப் பிடிச்சிழுத்தால் நீங்க சும்மா இருப்பீங்களா?

நாரா : என் இஷ்டத்துக்கு நான் செய்யறேன். நீ என் னடி என்னேக் கேக்கிறது?

காந் : அப்போ நானும் என் இஷ்டத்துக்கு யாரை யாவது கையைப்பிடிச்சி இழுத்திட்டுப் போகப்போகிறேன்.

நாரா : போயேண்டி போ!

கருப் : ஐயோ என்னங்க எஜமான்!

நாரா : போவடி போவ

காந் : சீ! மனுஷனே பாரு! கல்யாணி நல்லா தாழ்ப்பாள் போட்டுக்கோ! ஏதாவது நாய்கீய் வந்து நுழையும்!

(கல்யாணி அவ்வீட்டை விட்டு வெளியேறுகிருள்)

காட்சி—29

(தெருவழியாக பசியால் துடித்துச் செல்கிருள் கல்யாணி)

பொருளே இல்லார்க்கு தொல்லேயா
புது வாழ்வே இல்லேயா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லேயா
இறைவா நீ சொல்லேயா (பொரு

பசியாலே வாடும் பாவி முகத்தை
பார்ப்போர் இல்லேயா
எம்மைக் காப்போர் இல்லேயா
ஏழை எம்மை ஆதரிக்கும் இரக்கம் இல்லேயா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லேயா
இறைவா நீ சொல்லேயா? (பொரு

வறுமைப் பேயை விரட்ட நாட்டில்
வழியே இல்லேயா அதற்கழிவே இல்லேயா
பொருளில்லாதார் இல்லேயெனும்—உலகில்
பொருளில்லாதார் இல்லேயெனும்
திருநாளே இல்லேயா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லேயா
இறைவா நீ சொல்லேயா (பொரு

காட்சி—30

(நாராயணப் பிள்ளேயும், கருப்பனும் கோவிலுக்குச் சென்று வரும் வழியில்)

பிச்சை : ஐயா! அந்த தேங்காய் முடியிலாவது ஒண்ணு கொடுங்கையா! (கருப்பன் கொடுத்தல்)

நாரா : ஏண்டா திமிர் பிடிச்ச பயலே! தேங்காயை ஏண்டா கொடுத்தே?

கருப் : கோயிலிலே பிரசங்கத்திலே சொன்னுங்களே தர்மம் தலைகாக்கும்னு.

நாரா : கோயிலிலே உனக்கும் எனக்குமா சொன்னன்? பணம்டா! கொண்டா இங்கே (திருப்பி கேட்கிறார்)

பிச் : ஏழைங்க எஜமான்!

நாரா : ஏழை...ஏழவு (அடித்தல்) ஏ—நாயே! ஒனக்குப் பிரசாதம் கேக்குதா? (இந்நேரம் குணசேகரன் வருகிறான்)

நாரா : யாரடா நீ?

குண : உங்களை எங்கேயோ பாத்தாப்புல இருக்குல்லே

நாரா : பார்த்திருப்பே பார்த்திருப்பே.

குண : நீங்க...நீங்க...

நாரா : ஜெனரல் மெர்ச்சண்ட் நாராயணப் பிள்ளை

குண : நானு சேர்மையா...

நாரா : வேலைக்காரனு?

குண : உங்களை...

நாரா : சேர்மன் பார்க்கனும்னுரா?

குண : ஆமா! ஆமா! அவருகூட உங்ககிட்டே

நாரா : சர்க்கரை வேணும்னுரா? அவருக்கு மூட்டை மூட்டையால்ல வேணும், சாயந்திரமாக நம்ம வீட்டு பக்கமா வா இரசியமாக தர்றேன்.

குண : ப்ளாக்கிலே தர்றீங்களா?

நாரா : அட நீ என்னப்பா?

குண : அப்போ...சாயந்திரமா வரட்டுங்களா? ப்ளாக்லே தர்றீங்களா?

நாரா : வா...வா.

குண : அப்போ; இப்போ நான் போகட்டுங்களா?

(நாராயண பிள்ளையை அடிக்கிறான்)

நாரா : என்னடாப்பா இது?

குண : இது அடிடாப்பா! ஏ நாயே உனக்குத் தேங்கா கேக்குதோ? ஏழைகளுக்குப் பிரசாதம் கேட்குதா? கொண்டாடா இங்கே?

நாரா : பராசக்தி உஸ்ஸு ஓட்றபசங்க இன்னிக்கு அடிக்கிற அளவுக்கு வந்துட்டானுங்க.

குண : ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராகி விட்டால் ஒரு நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பராகிவிடுவார் உணரப்பா நீ ப்ளாக்கிலே தர்றீங்களா? இந்தா ப்ளாக்லே ஒண்ணு வாங்கிக்கோ... (நாராயணரைக் குணசேகரன் காலால் உதைத்துக் கீழே தள்ளுகிறான்)

காட்சி—31

(ஆற்றில் கையைக் கழுவிக்கொண்டே குணசேகரன்)

குண : கல்யாணி நானுவது திருடி ஏமாற்றி மிரட்டி சாப் பிட்டுவிடுகிறேன், நீயும் உன் குழந்தையும் பசி தீர்த்துக் கொள்ள என்ன பாடுபடுகிறீர்களோ?

(இந்நேரம் ஆற்றில் படகில் நின்று இறங்கிய விமலா குணசேகரனைப் பிடித்துக்கொள்கிறாள்)

குண : நான் திருடன் இல்லே! நான் திருடன் இல்லே!

விம : நீ முன்னும் திருடன் இல்லே நான் அப்படி நினைக்க வில்லே உன் பசிக்கு வேண்டியதை நீ எடுத்துக் கொண்டு போனாய் அதை என்னிடம் கேட்டாலே கொடுத்திருப்பேன். வாங்கிக்கொண்டு பேசாமல் நடந்தே போயிருக்கலாம்.

குண : எல்லோரையும் போலத்தான் நீயும்இருப்பேன்னு நினைச்சேன்.

விம : அதான் பகுத்தறிவாளரைப் பார்க்காதிங்கள்னு பாடினியா?

குண : ஆம், இரக்கமற்ற மனிதர்களைப் பகுத்தறி வாளர்னு சொல்றது தப்புதான்.

விம : ஆளே புதிராக இருக்கியே நீ...யாரு?

குண : நானென்ன இந்த ஊர் கலெக்டரா? ஒரேவரியிலே பதில் சொல்ல. என் கதையே பெரிது.

விம : எனக்குத் கதையென்றால் ரொம்பப் பிரியம் சொல்லு.

குண : இந்தக் கதையில் ஒரு அணுவளவும் உன்னால் ரசிக்க முடியாது.

விம : ஆவலை அதிகமாகத் தூண்டுகிறாய்! அவசியம் சொல்லத்தான் வேண்டும் வா வீட்டுக்கு.

குண வீட்டுக்கா.

விம : சும்மா வா பயப்படாதே (அழைத்து செல்கிறாள்)

காட்சி—32

(ஒருவன் நாய்க்கு பிஸ்கட் கொடுத்துக் கொண்டிருக் கிறான். அப்போது கல்யாணி வருதல்)

ஒரு : டார்லிங்...

கல் : ஐயா குழந்தையும் நானும் பட்டினி! குழந்தை யின் வயிறு காயுது! பால் வாங்க ஏதாவது ஒரு அரையணா...

ஒரு : போ...போ...

கல் : அந்த நாய்க்கு போடுற பிஸ்கட்டிலாவது ஒண்ணு கொடுங்கையா?

ஒரு : என்ன சொன்னே? நாய்னு சொன்னே? இது என் டார்லிங்...போ...போ...

காட்சி 33

(விமலா வீட்டில் குணசேகரன் தன் கதையைக் கூறல்)

குண : முத்து எடுக்கப் போய் கிழிஞ்சல் பொறுக்கிய கதையாக முடிந்தது தங்கையின் வீட்டில் மகிழ்ச்சி தவழும் உற்சாகம் ஊஞ்சலாடும் களிப்பு கொஞ்சும் என்றெல்லாம் கனவு கண்டேன். ஆனால் அங்கு வேதனை விளையாடிற்று. நானே வறுமையிலடிப்பட்டு பைத்தியக்காரனுய் அங்கு சென்றேன். இந்நிலையில் அறிமுகம் ஒருவேடா? என் தங்கையிடம் நான் யாரென்று சொல்லி அவள் வாழ்வை வேதனைப் படுத்தக்கூடாது. அவள் அழுதது போதும். அன்னும் அழ வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால் என் அன்புத் தெய்வம் கல்யாணி என் கண்களுக்கு அப்பால் வெகுதூரம் சென்றுவிட்டாள் தேடுகிறேன்! தேடுகிறேன்! தேடிக் கொண்டே இருக்கிறேன்.

விம : அழுவதா? சிரிப்பதா என்றே தெரியவில்லை. உன் கதையைக் கேட்ட பிறகு.

குண : ஏன்?

விம : அன்பு இருக்கிற அளவுக்கு உன்னிடத்தில் அறிவு இல்லை. இப்படி சொல்கிறேனே என்று ஆத்திரப்படாதே உன் செல்வம் கொள்ளையடிக்கப்பட்ட போதே நீ சென்றிருக்க வேண்டும் போலீசாரிடம்.

குண : ஒரு பாவையோடு போனேன்...பானம் அருந்தினேன்...பணத்தைப் பறிகொடுத்தேன் இதை போலீசாரிடம் சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது.

விம : பிச்சைக்காரனுய் திரிந்தாய் வெட்கமில்லை. திருடனுய் மாறினுய் அப்போதும் வெட்கமில்லை. ஆனால் உன் ஏமாற்றத்தை வெளியில் சொல்லமட்டும் வெட்கப்பட்டிருக்கிறாய் வேடிக்கையான மனிதன்.

குண : உனக்குத் தெரியாது சமுதாயமே பிச்சைக்கார மடம், பைத்தியக்கார விடுதி, திருடர் குகை இதில் நான் மட்டும் வெட்கப்படுவானேன்.

விம : ஆம்! சமுதாயம் பிச்சைக்காரர்மடம்தான். ஆனால் அதில் நீ திருவோடு இல்லாத பரதேசி. சமுதாயம் பைத்தியக்கார விடுதிதான் அதில் நீ கல்லெறியத் தெரியாத பைத்தியம். சமுதாயம் திருடர்குகைதான் அதில் நீ கன்னக்கோல் பிடிக்கத் தெரியாத திருடன். சமுதாயத்தை சாரசாரமாய் திட்டுகிறாயே யோசித்துப் பார்! உனக்குத் தெரியாமலே சமுதாயத்தோடு சேர்ந்து முட்டாளாகி இருக்கிறாய் நீ.

குண : முட்டாளா? நானு?

விம : ஆம். ஆயிரம் முறை சொல்கிறேன். பிச்சைக்கார உடையிலே எத்தனைபேர் பணக்காரராய் இருக்கிறார்கள்

பைத்தியக்கார வேஷத்தில் எத்தனேபேர் லட்சாதிபதிகளாய் உலவுகிறார்கள். தேவாலயத் திருப்பணி திருமாலுக்கு திரு விழா.....இந்தத் திரையிலே எத்தனேத் திருடர்கள் உலவு கிறார்கள் நீயும் மாறினுயே திருடனுய்...பித்தனுய்...பிச்சைக் காரனுய் முடிந்ததா உன்னுல் அந்த மோகன வாழ்வு பெற.

குண : எனக்குத் தேவையானது மோகன வாழ்வல்ல, கல்யாணி! என் தங்கை கல்யாணி!

வீம : இப்போதும் உன்னேக் குற்றம் சாட்டுகிறேன். நீ ஒரு சுயநலவாதி உன் சொந்தத் தங்கைக்காக அவள் சோபித வாழ்வுக்காக சுருண்டு போனுயே தவிர நாட்டிலே எத்தனே தங்கைகள் நலிந்து கிடக்கிறர்கள் என்று நினேத் தாவது பார்த்தாயா? உன் சொந்த தங்கைக்காக நீ அலேயும் போது வீதியிலே வேலி ஓரங்களிலே வீட்டு வாசல்களிலே நீர்பெருக்கி விம்மும் குரலில் பசிபசி எனப் பதறியழும் பாலவ யர்களேப் பார்த்திருப்பாயே அவர்களெல்லாம் யார். கல்யாணி கல்யாணி என்று கதறுகிறுயே ஒரு கல்யாணியல்ல ஓரு கோடிக் கல்யாணிகள் கண்ணிரும் கம்பலேயுமாக கதியற்ற நடைபிணமாய் நாட்டிலே நடமாடுகிறர்களே அதற்காக உன் நாவு அசைத்ததுண்டா உன் நெஞ்சு துடித்ததுண்டா?

குண : எனக்கேன் துடிக்கவேண்டும்? இந்தக் கேடு கெட்ட சமுதாயத்திற்கு நன்றிகெட்ட நாட்டிற்கு ஏழைகளே மிதித்து வாழும் எத்தர்களுக்குத் துடிக்கவேண்டும். நெஞ்சு உயிர் உடலெல்லாம் எனக்கேன் துடிக்கவேண்டும்!

வீம : அந்தச் சமுதாயத்திலே நீயும் ஒரு அங்கம்.

குண : ஆனுல் ஏழை

வீம : அப்படி ஆக்கப்பட்டாய் இதைக்கேள்! உன்னே ஏமாற்றிப் பணத்தை பறித்துக் கொண்டானே, அந்த நாடோடியை நான் பாராட்டுகிறேன்!

குண : பாராட்டுகிறுயா?

வீம : ஆம்! உன் கண்ணேத் திறந்தவள் அவள்தான் நீ ஏழையாக ஆக்கப்படாவிட்டால் ஏழை உலகை நினேத் துக்கூட இருக்க மாட்டாய். அப்படி ஒரு உலகம் இருப்ப தாகவே உனக்குத் தெரிந்திருக்காது. உன் உலகம் உல்லாச புரியாக இருந்திருக்கும். மாளிகையிலேயே விசும் தென்றலே அனுபவிப்பாய் குடிசையிலேயே குமுறும் புயலேக் காணமாட் டாய், சமுதாயக் கோணல்களே வெறுக்கக் கற்றிருக்கிறுய் ஆனுல் எரிமலேயைத் தண்ணீர் ஊற்றி அணேக்கப் பார்க் கிறுய். மலேப் பாம்பை அடக்க மகுடி ஊதுகிறுய். சமுதாயப் புரட்சி ஆலகால விருச்சத்தின் கிளேயை வெட்டுவதல்ல.

அதன் ஆணிவேரையே பெயர்ப்பதுதான், வெட்கப்படு. நீ மேற்கொண்ட வேலைகளுக்கு வேதனை தீர்க்கும் மார்க்கம் நீ போட்ட வேஷங்களல்ல. அதற்காக மட்டும் இருந்திருக்கக் கூடாது. அவதிப்படும் ஆயிரமாயிரம் தங்கைகளுக்காக இருந்திருக்கவேண்டும் அதற்காக வெட்கப்படு, வேதனைப்படு விசாரப்படு.

குண : போதும்! போதும்!

விம : மன்னித்துக்கொள் உன் மனதைப் புண்படுத்தி விட்டேன் பாலைவனத்தை பூஞ்சோலையாக்க புதிய பாதை காண வேண்டும் உன்னைப்போல் மண்ணைவாரி இறைத்துப் பயனில்லை.

குண : ஆமாம்! உலகப் புத்தகத்தின் அனுபவ ஏடுகளை இப்படி புரட்டுகிறுயே இதற்கெல்லாம் ஆசிரியர் யார்?

விம : எல்லாம் அண்ணைதான்?

குண : அண்ணைவா?

விம : ஆம் முன்பே சொன்னேனே எனக்கு ஒரு அண்ணை இருப்பதாக எங்கள் குடும்பமே வேடிக்கையானது என் தந்தை ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன? என்ற ஏதார்த்தஉலகில் சஞ்சரிப்பவர்அண்ணைவோ புதுமையுள்ளம் படைத்தவர் அவர் தங்கை நான்.

(அன்றிரவு வேளையில்)

குண : (படுக்கையில்) கல்யாணி காட்டிலோ மோட்டிலோ நான் இங்கே கட்டிலிலே சே.....சே.....ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானும் கல்யாணி! கல்யாணி!

(விமலா கனவு காண்கிறுள்—கனவிலே)

புதுப்பெண்ணின் மனதைத் தொட்டு போறவரே
உங்க எண்ணத்தை சொல்லிவிட்டுப் போங்க
இளம் மனசைத் தூண்டிவிட்டுப் போறவரே
அந்த மர்மத்தைச் சொல்லிவிட்டுப் போங்க (புது
உம்மை எண்ணியேங்கும் என்னிடத்தில் சொல்லாமல்
இருட்டு வேளையிலே யாரும் காணுமலே
திருட்டுத்தனமாய் சத்தம் செய்யாமலே
சந்தித்திருந்ததெல்லாம் சிந்தித்துப் பாராமலே (புது
என்னை சுத்தி பறந்தவண்டே சும்மா நீ போகாதே
புத்தம் புதுமலரின் தேனைச் சுவைத்துப் போவாயே
என்—இன்பக்கனவை யேனே கலைக்கிறுய்?
அன்புக் கயிறுதான் அறுக்கபாராது மாகாதையா

(விடிந்ததும்)

விம : குண! நான் இலட்சியவாதி என்று நினைத்துப் போய்விட்டாயா? இலட்சியவாதி என்றுல் காதலை வெறுத்த

மணிமேகலையாகவா இருக்கவேண்டும் கண்ணகியாகவும் இருக்கலாமே.

ஆபீ : தகப்பன் பெயர் வந் : பரமசிவம்பிள்ளை
ஆபீ : உன் பெயர் வந் : இராமச்சந்திரன்

ஆபீ : இராமச்சந்திரன் பிள்ளை...
வந் : எனக்குப் பிள்ளை கிள்ளை ஒண்ணும் இல்லீங்க.
ஆபீ : அட ஜாதியப்பா
வந் : அதுதானே கிடையாது
ஆபீ : தகப்பனூர் தொழில்
வந் : தொழில் தகப்பனூர் தானுங்க
ஆபீ : பெயர்? வந் : சொர்ணலால்

ஆபீ : (அடித்தவனைப்பார்த்து) நீ எங்கையா இங்கே வந்தே? மொத்தமே நூறு பேருக்குத்தானய்யா இடம்.

வந் : நம்ம டில்லிக்காரங்கையா கொஞ்சம் பெரிய மனசு வையுங்கோ

அடுத் : நீ என்னிக்கய்யா டில்லிபோய்ச் சேரப்போறே?

[ஞானகேகரன் தொண்டிக்காலுடன் வருதல்]

ஞான : அய்யா...
ஆபீ : போ...போ...இடமில்லே
ஞான : நாங்க ஒரு கூட்டமே...

ஆபீ : ஒருத்தருக்கே இடமில்லே...போங்கையா சுத்த நியூசன்சா இருக்கு.

ஞான : அப்படியானால் நாங்களெல்லாம் எங்கே போறது

ஆபீ : என்னமோ வந்து வழிகாட்டச் சொல்றியா போடி எங்கேயாவது விழுந்து சாவுறதுதானே.

ஞான : கால் ஒடிந்த பிறகும் சாவதற்குப் பயந்து தானே பல மாதங்கள் பட்டினி கிடந்து படாத பாடு பட்டு பசியுடன் பாதையோரத்திலே படுத்துறங்கி நடந்து வந்திருக்கிறோம் எங்களைப் பர்மாவுக்கு அனுப்பிய பாரதத் தாய் எங்களை இந்நிலையில் பட்டினி போடமாட்டாள் என்று நம்பித்தான் வந்திருக்கிறோம். சாவதாக இருந்தால் பர்மாவிலே குண்டு வீச்சிக்கும் பயப்படாமல் எதிர்த்து நின்றிருந்தால் ஒரே தடவையில் பத்தாயிரம்பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்போம் ஆனால் சாவதற்கு வழிகேட்க வரவில்லை சங்கடப்பட்ட எங்கள் மனதிற்கு சாந்தி கேட்கவே வந்தோம்.

ஆபீ : சட்டப்! இதென்ன ஆபீஸா? அல்லது ஓங்கவீடா

ஞான : இடம் இல்லை உண்மையான அகதிகளுக்கு இடம் இல்லை வந்தவர்களை எல்லாம் வரவேற்ற தேசத்தில்

பிறந்தவனுக்கு இடம் இல்லே உங்களேப்போன்ற இருதய மற்ற வர்கள் இருக்கும்வரை மனிதனுக்கே இடமில்லே, அன்பு, அறம் இவை அத்தனேக்குமே இடம் இல்லே.

ஆபீ : கெட் அவுட் கெட் அவுட்.

நொ : கசாப்புக் கடைக்குப் பெயர் கருணேமகால், இதற் குப்பெயர் அகதி முகாம் வாருங்கள் போவோம்.

ஒரு : இப்படிச் சிரழிவதைவிட சிறைச்சாலேக்குச் செல்ல லாம்.

நொ : பொறு தம்பி திட்டவட்டமாக எதையும் யோசிக் காமல் அவசரத்தில் நாலுபேர் எதையுமே செய்துவிட்டால் சிறைச்சாலேக்குச் செல்ல வேண்டியதுதான். நம்முடைய நிலேமை உலகத்துக்கு தெரியாது பிச்சைக்காரர்கள் நாம்மட்டு மல்ல இந்தநாடு பூராவுமே பரந்துகிடக்கின்றனர். முதலில் பிச்சைக்காரர்கள் அத்தனே பேரையும் ஒன்றுசேர்க்க வேண் டும். நமக்காக அரசாங்கமோ தேச கட்சிகளோ பாடுபடுவதாக தெரியவில்லே. நம்முடைய கோரிக்கைகளே வீடு வீடாக சென்று வெளியிடுவதைவிட நாடறியப் பரப்புவதே நலம், நம்முடையகுரல் "அரகரா மகாதேவா என்று கைலாசத்துக்கு எட்டிப் புண்ணியம் இல்லே. அரசாங்கத்துக்கு எட்ட வேண் டும். பிச்சைக்காரர்கள் அத்தனேபேரையும் ஒன்று சேர்த்து மகாநாடு ஒன்று நடத்த வேண்டும். அந்த மகாநாட்டுக்கு சென்னே மாகாணப் பிச்சைக்காரர் மகாநாடு என்று பெயரிட வேண்டும். (எல்லோரும் சிரிக்கின்றனர்) ஏன் சிரிக்கிறீர்கள்? சிரிப்பதற்காகச் சொல்லவில்லே. சிந்தனே செய்து பாருங்கள்? அதிலேபிறந்த தீர்மானம் நமக்குவோட்டுரிமை வேண்டுமென் பது அதைப் பெற்று விட்டால் நாம் எலக்ஷனில் கூட நிற்க லாம் நம்மை எதிர்த்து போட்டியிட எவரும் துணியமாட்டார் கள். எப்படியோ மகாநாடு நடத்த வேண்டும் அதிலே தீப் பொறி பறக்கும் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும். நாம் மூட்டுகிற புரட்சித் தீ அரசாங்கத்தையே நடுங்க வைக்க வேண்டும். (உயிர் போனலும் சரி, நமது உரிமைக் குரலே உரக்க எழுப்ப வேண்டும் வருங்கால நமது சமுதாயத்தை வகையோடு வாழ்வதற்கு வழி வகுக்க முடியும். பிச்சைக்கார மகாநாடு வேண்டும் என்று கூட்டத்தினர் கூச்சலிட்டனர்) அப்படியானல் நான் வருவுக்குக் கிளப்புகிறேன்"

காட்சி—35

(இடம் அகதி முகாம்)

கல் : அண்ணு இரங்கூனிலிருந்து அகதிகள் எல்லாம் வந்துருக்காங்களாமே!

ஆபீ : ஆமா யாரு வேணும்?

கல் : சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன்.

ஆபீ : அப்படி ஒருவரும் இல்லீயே! அதோ அந்த ஆல் மரத்தடிலே ஒரு கூட்டம் இருக்கு அங்கே போயி விசாரி.

கல் : அண்ணு நீங்களெல்லாம் பர்மாலே இருந்துதானே வர்றீங்க?

ஒரு : ஆமாம்மா அகதிகளாக வந்தோம், ஆண்டிகளாக மாறிவிட்டோம்!

கல் : இரங்கூனில் என் அண்ணன்மார்களைத் தெரியுமா?

மற் : ஊகும். அவுங்க பேரு என்ன?

கல் : சந்திரசேகரன்... ஞானசேகரன்... குணசேகரன்...

ஒரு : எங்ககூட்டமே இவ்வளவு பேருதான் இதிலே உன் அண்ணன்மார்கள் இருக்காங்களான்னு பாரு (கல்யாணி பார்க்கிறுள் இல்லை)

காட்சி—36

(பசி வாட்டவே கல்யாணி பிச்சைக் கேட்கிறுள்)

கல் : அய்யா நானும் குழந்தையும் சாப்பிட்டு ஆறுநாள் ஆகுது.

வீட் : நாங்க சாப்பிட்டு மூணுநாள் ஆகுது. நீ பிச்சைன்னு தெருத்தெருவா கேட்குற நாங்க வீட்டுக்குள் ளேயே இருக்கோம். இதுதான் வித்தியாசம் இன்னிக்கு ஜட்ஜி சேகர் வீட்டிலே விருந்து அங்கே போயி கேளு.

கல் : எந்த வீடய்யா?

வீட் : அதோ தெரியுது பாரு அந்த மூல வீடுதான்.

(கல்யாணி போகிறுள்) காட்சி—37

(வகுலுக்கு போயிருந்த நொண்டி வருதல்)

நொண்டி : இராகவா இன்னிக்கு ஏதாவது விசேஷம் உண்டா?

ராக : பாவம் ஒரு பிச்சைக்காரி ஒரு குழந்தையுடன் வந் தாள் நாங்களெல்லாம் யாருன்னு கேட்டாள். நாங்கள் இரங் கூனிலே இருந்து சம்பாதிச்சிட்டு வர்றோம்னு சொன்னோம்... இரங்கூனிலேஎன்மூன்று அண்ணன் மார்களைத் தெரியுமான்னு கேட்டாள். தெரியாதுன்னு சொல்லிவிட்டோம்.

நொ : அவர்களது பெயரை என்னவென்று சொன்னுள்?

ஒரு : அதுநம்ம தமிழ்நாட்டு பெயராகவே தெரியலேயே?

ராக : என்னமோ—சந்திரசேகரன்...

நொ : சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன் என்றுளா?

எல் : ஆம்...

நொ : அய்யோ கல்யாணி! என் தங்கை கல்யாணி! கல் யாணி! (என்று கதறி கீழே விழுகிறுன்)

காட்சி—38

(சந்திரசேகரன் வீட்டில் கல்யாணி பிச்சை கேட்கிறுள்)

கல் : அய்யா! குழந்தையும் நானும் பட்டினி.
சேகர் : சரி அப்புறமா வா!
கல் : அய்யா நல்லா இருப்பீங்க!
சேகர் : உனக்கு ஒருக்கா சொன்னத் தெரியலேயே
கல் : அய்யா உங்களுக்கு கோடி புண்ணியம்...
(சேகரின் காலைப் பிடிக்கிறான்)
சேகர் : புண்ணியம் பார்த்துப் பார்த்துத்தான் தங்கச்சி முகத்தைக்கூட பார்க்க முடியாமல் போச்சி (என்று கல்யாணியை காலால் உதைத்து தள்ளுகிறார்)
கல் : அடபாவிகளே! நீங்கள் சகோதரர்கள் கூடப்பிறக்க வில்லே டசியால் துடிக்கும் என் பாலகனைப் பார்த்த பிறகும் பாட்டைத் தலையைக் கண்ட பிறகும் பாவிகளே! உங்கள் கண்ணில் பஞ்சடைத்து விட்டதா பாவம்... புண்ணியம்... நரகம் என்று பேசும் அகிம்சா மூர்த்திகளே நரகம் என்று ஒன்று இருந்தால் அதிலே உங்களுக்கு இடம் சரியாய்ப் போய் விடும் சரியாய்ப் போய்விடும்.

(வேலைக்காரனால் விரட்டப்படுகிறான்)

கல் : கண்ணே! ஆடம்பரத்துக்கும் அக்கிரமத்துக்கும் அடங்கி நடப்பதுதாண்டா உலகம்! இந்த உலகத்தில நமக்கு வாழ இடம் கிடையாது. என்ன பார்க்கிறாய் கண்ணிலே வடியும்கண்ணீர் பாலாகக் இருக்கக் கூடாதா என்றுபார்க்கிறாயா? நீயும் நானும் அடிபட்டதை உன் அப்பா பார்த்திருக்க வேண்டும் உன் மாமன்மார்கள் பார்த்திருக்க வேண்டும். உன் அப்பாவும் மாமாவும் இருந்தால் நீதான் உன் அப்பாவை கர்ப்பத்திலே விழுங்கி விட்டாயே. ஏன் அழுகிறாய்? பசிக்குதா அழாதே பசியை என்னலேயே தாங்க முடியவில்லேயே உன்னால் எப்படித் தாங்க முடியும் வா போவோம்.

காட்சி—89

(தங்கையை தேடி அலைந்த குணசேகரன் தன் நெஞ்சுக் குமுறலே பாடல் மூலம் வெளியிடுகிறான்)

நெஞ்சு பொறுக்குதில்லேயே—இந்த
நிலேக்கெட்ட மனிதரை நினைத்துவிட்டால் (நெஞ்சு
அஞ்சியஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லே அவனியிலே
வஞ்சனைப் பேய்களென்பார்—இந்த
மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டிலென்பார்—மிகத்
துயர்படுவார் எண்ணி பயப்படுவார் (நெஞ்சு
கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்

பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்தே
துஞ்சி மடிகின்றாரே — இவர்
துயர்கனைத் தீர்க்க ஓர் வழியுமில்லையே (நெஞ்சு

குப் : அண்ணே நீ பாடினதெல்லால் சரிதான்

குண : இந்தப் பாட்டை நான் பாடலே குப்பா இந்த பாட்டை நான் பாடியிருந்தால் எல்லோரும் அடிக்க வருவாங்க இது வேறே ஒருத்தர் பாடியது

பூசாரி : டேய் குப்பா நீவெட்டி பூஜைக்கு நேரமாகுது மணி அடிக்கவாடா (குணசேகரன் போய்விடுகிறான்)

குப் : என்ஞண்ணே! போறே? நானேக்கு வர்றியா?

(பூஜை முடிந்தவுடன் கல்யாணி வருகிறாள்)

கல் : (சிலையை நோக்கி) தாயே பராசக்தி! எனக்கு நீ தான் கதி! லோகமாதா என்னைக் காப்பாற்று.

பூசாரி : யாரது? கல் : கதியற்றவள் பெயர் கல்யாணி.

பூசாரி : கவலைப்படாதேயம்மா உன் கஷ்டங்கள் எல் லாம் தீருவதற்குத்தான் அம்பாள் கோயிலுக்கு வந்திருக்கே நீ என் பொண்ணுமாதிரி இருக்கே! உள்ளே சென்று என் தாயைத் தாராளமாக வணங்கம்மா! (கல்யாணி உள்ளே போகிறாள். சென்றவுடன் பூசாரி தனக்குள்) ஆஹா! என்ன அழகு என்ன உடம்பு! என்ன வாலிபம்! இன்று இவளை விடக்கூடாது வழி பலாத்காரம் பலாத்காரமா? பராசக்தி கோவிலிலா? ஆம் வேறு எங்கே செல்வது பூசாரி சுட்டக்கல்லே சோறு என்று சொல்லி பக்தர்களை ஏமாற்றினுப் கற்பழிப்பதா? ஆம் இதைச் செய்வதில் என்ன? ஏன் அம்பாள் இருக்கிறாள் என்று பார்க்கிறாயா? அவள் இந்த இடத்திலேயேதான் இருப்பாள். நகரமாட்டாள். ம்... தாமதிக்காதே (கல்யாணியின் கையைப் பிடித்து) கல்யாணி வேறு வித்தியாசமா நினைக்காதே. வியாதியுள்ள பெண்களைத் தொடுவதற்கு எப்படி டாக்டருக்கு உரிமை இருக்கிறதோ... அதுபோல பக்தியுள்ள பெண்களைத் தொடுவதற்கு ஆண்டவர்களுடைய அடியார்களாகிய எங்களுக்கு உரிமை யுண்டு.

கல் : சீ...காம்ப்பேயே—தாயே பராசக்தி

(பூசாரி கல்யாணியின் கற்பைக் கரக்க முயல்கிறான். ஆலில் குப்பன் இக்காட்சியைக் கண்டு மணியை அடித்து விடுகிறான். புலி வாயின் பிடியிலிருந்து புள்ளி மான் தப்பி ஓடுகிறது)

காட்சி—40

(தொல்லைகளாலும் பசிக்கொடுமையாலும் கன்னியரின் கற்பைச் சூறையாடும் கயவர்களாலும் கல்யாணி துரத்தப் பட்டு அவள் வாழ்க்கையின் ஓரத்திற்கே சென்று விட்டாள்)

கல் : கண்ணே! அதோ நம் உலகிற்குப் பாதை அந்த உலகிற்குப் போய்விட்டால் பசியே கிடையாது! உலகத்தின் பெயரைச் சொல்லி என் உயிரை வாங்கப் பார்க்கிறாயே அம்மா என்று கெஞ்சுகிறாயா? முடியாது எந்த உயிருக்காக இந்தப் பாழும் உயிரை சுமந்தேனே அந்த உயிரை கொல்லத்தான் போகிறேன். இந்த வஞ்சக உலகத்தில் உன்னை தனியாக வாழவிட முடியாது என் மடியிலே தவழும் மாணிக்கம் உன்னை இந்த நதியிலே தவழ விடப்போகிறேன். திசைகாட்டி? அதுவே என் சுகம் காட்டி! உன்னை இந்த ஆறுகாட்டி! உன்னை இந்த ஆறுகாட்டும் வழியே அனுப்பப் போகிறேன். சோறுபோட சொரணையற்றவர்கள் விழுந்து சாவதற்கு இந்த ஆற்றையாவது வெட்டினார்களே! வா போவோம் வறுமை இல்லாத இடத்துக்கு உன் கடைசி முத்தத்தைக் கொடு! கொடுக்கமாட்டாயா? கன்னித்தமிழே கட்டி முத்தம் ஒன்று கொடு. உன் கடைசி முத்தத்தை இந்தக் காதகியின் காய்ந்த உதட்டிலே கொடு! கொடு.

(குழந்தையைத் தூக்கி ஆற்றிலே எறிகிறாள் கல்யாணி அப்போது போலீசார் வந்து கல்யாணியை விரட்ட அவளும் ஆற்றில் குதிக்க அவளைச் சிறைபிடிக்கின்றனர் போலீசார்)

குண : சாவது எவ்வளவோ மேல். இப்படி கஷ்டப் படுவதைவிட! வைரக்கல்லிலே சம்மட்டி அடி விழுந்தாற் போல் எங்கள் குடும்பம் குலைந்து நொறுங்கிவிட்டதே. கல்யாணி எங்கு போனாளோ? சகோதரர்கள் என்னவானார்களோ ஞானசேகரன் ஐயோ! சந்திரசேகரண்ணா!

காட்சி—41

இடம்: நீதிமன்றம் (குற்றவாளிக் கூண்டிலே கல்யாணி)

நீதி : (கல்யாணியைப் பார்த்து) இக்கொலையைப் பற்றி என்ன சொல்கிறாய்?

கல் : (மௌனம்)

நீதி : இப்படி மௌனமாக இருந்தால் கோர்ட்டை அவமதிப்பதாகும்! கொலை, தற்கொலை முயற்சி இப்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய். ஊமையாக நடிப்பதால் நிரபராதியாகிவிட முடியாது பதில் சொல்! நீ யார்? உன்பெயர் என்ன? உன் சொந்த ஊர் எது? குழந்தையைக் கொல்ல வேண்டிய காரணம்? குழந்தைக்குத் தகப்பன் யார்? தகப்பன் பெயர் தெரியாத குழந்தையா?

கல் : ஆம் தெரியாததுதான்! பச்சைக் குழந்தைக்கு எப்படி தகப்பன்பெயர் தெரியும்? நீதிபதி அவர்களே திருப்பித் திருப்பி எதையும் கேட்காதீர்கள் தீர்ப்பைக் கூறிவிடுங்கள்.

நீதி : விசாரணையின்றி எப்படியம்மா தீர்ப்புக் கூறுவது?

உன்மேல் சாட்டப்பட்டுள்ள குற்றங்களைப் பற்றி நீ என்ன சொல்லுகிறாய்?

கல் : நான் என்ன சொல்வது? உங்கள் சட்டம் என்ன சொல்லுகிறதோ அப்படியே செய்யுங்கள்

நீதி: நீ கொலைகாரிதானே?

கல் : ஆம்! உங்கள் சட்டப்படி; நியாயப்படி அல்ல.

நீதி: பெற்ற குழந்தையை கொல்வதுதான் நியாயமா?

கல் : நான் பெற்றேன், நானே அழித்தேன், பெறுவ தற்கு உரிமையிருக்கிறது போலவே அழிப்பதற்கும் உரிமை இருக்கிறது.

நீதி: ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசாங்கத் துக்குச் சொந்தம்.

கல் : சொந்தம், சோற்றுக்கு கஷ்டப்பட்டோம். சுகத் தைத் தேடி சுற்றியலைந்தோம், சொறிநாயிலும் கேவலமாக நடத்தப்பட்டோம். பசிபசியெனப் பதறியழுதோம்; பட்டினி புழுக்களாய்த் துடித்தோம்; துவண்டோம் நெளிந்தோம்— அப்போதெல்லாம் சொந்தம் பாராட்டி ஆதரிக்கவில்லை அரசாங்கம். அநீதியிடையே வாழவேண்டாம்; இறப்புலகில் இன்பம் காண்போம் என்று சாவதற்குச் சென்றால் சட்டம் என்ற கையை நீட்டி சொந்தம் என்ற சூழ்ச்சி மொழி பேசு கிறது! அரசாங்கம் அதிசயமான அரசாங்கம் அற்புதமான நீதி

நீதி : குதர்க்கம் பேசாதே குழந்தையைக் கொன்றது குற்றம் ஒப்புக்கொள்கிறாயா இல்லையா?

கல் : குற்றம்! இது குற்றமென்றால் ஏழு குழந்தைகளைக் கிணற்றிலே எறிந்தாளே நல்லதங்காள் அது எவ்வளவு பெரிய குற்றம்? நல்லதங்காள் கதை நாடெல்லாம் நடக் கிறதே அதை ஏன் தடுக்கவில்லை சட்டம்? பிள்ளை கறி சமைத் தார் சிறுதொண்டர் என்று பெருமை பேசுகிறார்களே அது ஏன் தடுக்கப் படவில்லை? அவர்கள் கற்றுகொடுத்த பாடத்தைதானே நான் செய்தேன் இது எப்படி குற்றம்?

நீதி: நல்லதங்காளையும் சிறுதொண்டரையும் காரணம் காட்டி இங்கே பேசாதே...உன் ஆத்திர உணர்ச்சி நீதியை அவமதிக்கக்கூடாது, நடந்த விஷயத்தை மட்டும் நீ கூற வேண்டுமேயன்றி அரசாங்கத்தையோ சமூகத்தையோ குறை கூறுவது பொருத்தமில்லை.

கல் : பசியால் பதறினான் என் பாலகன், வெட்கமில்லா மல் சொல்கிறேன் இங்கிருப்பவர்களையெல்லாம் சகோதரர் களாக நினைத்து. என் குழந்தை நாக்கு வறண்டுபோய் என் மேலாடையை நகர்த்துவான், பலநாள் பட்டினி கிடந்த இப்பாவியிடம் பாலா இருக்கும்? அந்தக் கொடுமை தாங்க முடியவில்லை, கொன்றுவிட்டேன். இது குற்றமா?

நீதி : குழந்தையை எப்படியும் காப்பாற்ற வேண்டும்.

கல் : என் குழந்தை என்ன திருஞானசம்பந்தரா பார்வதி வந்து பால் கொடுத்துக் காப்பாற்ற? நான்தானே காப்பாற்றியாக வேண்டும். என்னை வாழவிடாமல் என் வரலிபம் எனக்கு இடையூருக இருந்தது வஞ்சகர் வலியிலே வீழாத காரணத்தால் சட்டத்தின் முன் நிற்கிறேன் குற்ற வாளியாக ஆனால் நான்மட்டும் கொஞ்சம் உதட்டை அசைத் திருந்தால் உப்பரிகையிலே உலாவிக் கொண்டிருப்பேன் விதவையாக அல்ல விஷமம் பிடித்தவளாக அல்ல. விபச்சாரி யாக விபச்சாரியாக. அதைத்தானே இந்த சமூகம் விரும்பு கிறது. அப்படித்தானே இந்த சமுதாயத்தை எதிர்க்க முடி கிறது. வேறு எப்படி வாழ முடியும் அனுதையாக.

நீதி : நீ அனுதையா?

கல் : ஆம் காலம் என்னை அனுதையாக்கிற்று.

நீதி : கதை பேசாதே விஷயத்தைச் சொல்.

கல் : பிறந்த மறுநாளே தாயார் இறந்துவிட்டாள். தகப்பனுர் நிழலிலே வளர்ந்தேன். தமையன்மார் மூன்று பேர் அவர்களை நான் சரியாகக் கூட பார்த்தது கிடையாது. அவ் வளவு- இளமையிலேயே இரங்கூன் சென்றுவிட்டார்கள். கல்யாணமாயிற்று எனக்கு. கணவர் இறந்தார், தந்தையும் இறந்தார். இரங்கூனிலிருந்து எனது அண்ணன்மார் சந்திர சேகரன், ஞானசேகரன், குணசேகரன் வந்துவிடுவார்கள் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தேன்; வரவில்லை அண்ணன்மார். பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பிச்சைக் காரியாய்த் திரிந்தேன். நாட்டிலே எனக்குக் கிடைத்த பதில் போடி வேலையற்றவளே என்பதுதான். ஒரு நீதிபதியாம் நேர்மையை அனுஷ்டிப்பவராம். பிச்சைக் கேட்கப்போன என்னைப் பூட்ஸ் காலால் உதைத்தார். (நீதிபதி சேகர் கல்யாணி தன் தங்கையென தெரிந்து அதிர்ச்சியடைந்து கீழே விழுகிறார்.)

காட்சி—42

(ரோட்டில் பிரசங்கி பேசுகிறார்)

பிர : உலகப் பேரழகி கிளியோபாட்ரா தமிழ் நாட்டின் முத்துக்களை சாராயத்தில்போட்டு குடித்தாளாம். அத்தகைய தமிழகத்தின் பெண்களோ இரங்கூனுக்கும் சிங்கப்பூருக்கும் சென்று ஆடவர்கள் சம்பாதித்து அனுப்பும் பணத்தை எதிர் பார்த்து பட்டினி கிடக்கிறார்கள், ஆலயங்கள் இங்கே. ஆண் டவனுக்கு வைரக்குல்லா தங்கக் கவசம் ரத்தின சிம்மாசனம், அந்த ஆண்டவனின் அருமைக் குழந்தைகளோ அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அல்லல்படுகிறார்கள். கேள்விப்படு கிறோம் நண்பர்களே தாய் தன் குழந்தையை விற்றாள் என்று.

பசியின் கொடுமையால் பல தாய்மார்கள் குழந்தையை

விற்றுவிட்டார்களாம். தாயார் குழந்தையை விற்றுள்! பத்து மாதம் சுமந்து படாதபாடு பட்டதாய் பாலூட்டி சீராட்டி வளர்த்த தாய், தொட்டிலிலே போட்டு ஆராரோ பாடிய தாய் வெள்ளிகிண்ணத்தில் பால்சோறு போட்டுத் தாழ்வாரத்திலே தவழ்ந்தோடும் பிள்ளைக்கு ஊட்ட வேண்டும் என்று கனவு கண்டிருந்த தாய் மஞ்சள் நீராட்டி. மகனின் மழலைமொழி கேட்டு "பள்ளிக்குச் செல்லடா கண்மணி" என்று அவன் பின்னழகைக் காணவேண்டுமென்று துடித்துக் கிடந்த தாய், மகனுக்குத் திருமணம் செய்து மகனும் மரு மகளும் மஞ்சத்திற்குச் செல்லும் அந்த நாளும் வாராதோ எவ்வு ஏங்கிக்கிடந்த தாய், தான் பெற்ற குழந்தையை தன் வயிற்றிலே கிடந்த வைரத்தை வைடூரியத்தை, கோமே தகத்தை, தங்கத் தாம்பளத்தை விலைமதிப்பு கூறுகிறுள். 'பிள்ளையோ பிள்ளை, என்று மார்க்கெட்டில் கீரையோ கீரை என்று கூறுவதுபோல எட்டணாவுக்குக் குழந்தையாம்! பெரிய குழந்தை ஐந்து ரூபாய் பிஞ்சுக் குழந்தை மூன்று ரூபாய், கொடுமை! கொடுமை'

இதோ இன்னொரு கொடுமை, குழந்தைக்கும் தனக்கும் உணவு கிடைக்காத காரணத்தால் குழந்தையை ஆற்றிலே எறிந்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ளப்போகும் போது பிடிபட்டு கோர்ட்டிலே குற்றவாளிக் கூண்டிலே மரண தண்டனைக்காக காத்திருக்கிறுள் கல்யாணி என்ற பெண்.

(இதைக் கேட்டுக் கொண்டிருந்த குணசேகரன் எழுந்து ஓடுகிறுன்) எதிர்ப்பட்ட குப்பனை சந்திக்கவே தன் தங்கை கல்யாணியை பூசாரி கற்பழிக்க முயற்சித்தான் என்பது அறிந்து ஆத்திரத்துடன் பராசக்தி கோவிலுக்குச் செல்கிறுன்

காட்சி—48

(இடம் காளியம்மன் கோவில்)

(பராசக்தி கோவிலில் குணசேகரன் பூசாரியைத் தாக்கும் காட்சி)

பூசாரியின் தடபுடல்கள் காவடிகள் அம்பாளுக்கு ஆராதனைகள் அர்ச்சனைகள் தேவி விழா! ஒரே அமர்க்களம் பாடைக் காவடியொன்று பராசக்தி சன்னதிக்கு வருகிறது பூசாரியின் அதிதீவிர பூஜைக்குப் பின் பாடையிலிருந்தவன் எழுந்திருந்தான்

கிழவி : தாயே! பராசக்தி! என் மகனுக்கு செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்திட்டேன். என் குழந்தையைக் காப்பாற்று தாயே.

பூசா : ஓம்...ரீம்கிரீம் உன் பிள்ளை உடம்புக்கென்னம்மா

கிழ : அம்பாள் குடிகொண்டிருந்தா என் பிள்ளை உடம் பிலே ஒரு வில்லங்கமும் வராமல் இருந்தால், பாடைக் காவடி

எடுக்கிறதா வேண்டிக்கிட்டேன். அவ தயவுலே ஒரு கண் மாத்திரம் போயி பிழைச்சுக்கிட்டான் காணிக்கையும் செலுத்திட்டேன்.

பூசாரி : பயப்படாதே உன் மகன் தீர்க்காயுசா இருப்பான்.

(பராசக்தியின் சிலையின் பின்னுலிருந்து ஒரு குரல்)

குரல் : ஏ பூசாரி! முதலில் உன் ஜாதகத்தைக் கணித்துக்கொள்.

பூசாரி : யார் அம்பாளா பேசுகிறது.

குரல் : அம்பாள் எந்தக்காலத்தில் பேசினுள் அறிவு கெட்டவனே?

பூசாரி : பராசக்தி தாயே!

(அம்பாள் சிலைக்குப் பின்னுலிருந்து பெரும் சிரிப்புடன் குணசேகரன் வெளிப்படுகிறுன்)

குண : இந்தப் பராசக்தி உனக்குத்தாய் என் தங்கை கல்யாணி உனக்குத் தாசி மானங்கெட்டவனே! அப்படித் தானே?

பூசாரி : யாரப்பா நீ! இது என்ன விபரீதம்

குண : விபரீதம் வருமென்று தெரியாத காரணத்தினுல் தான் என் தங்கையோடு விளையாடியிருக்கிருய் நீ பக்தர் களுக்கு ஆசீர்வாதம் புரியும் பரம பாதகா நீ இப்போது கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிருய் இவர்கள் அத்தனேபேரும் நீதிபதிகள் தீர்ப்புக்கூறட்டும்.

பூசாரி : பராசக்தி! பராசக்தி

குண : அது பேசாது கல் பேசுவதாயிருந்தால் என் தங்கையின் கற்பைசூறையாட துணிந்தபோது "அட பூசாரி அறிவுகெட்ட அற்பனேநில்" என்று தடுத்திருக்காதா? உனது பலாத்கார அணைப்பிலே சிக்கிய என்தங்கை ஆயிரம் முறை அந்த பராசக்தியை அழைத்தாளாமே ஓடி வந்து அபயம் கொடுத்தாளா?

பூசாரி : பக்தகோடிகளே! பார்த்துக்கிட்டு நிற்கிறீங்களே

குண : ஏன் மனித உதவியை நாடுகிருய் தேவிபக்தனே உன் தேவியின் கையில் சூலமிருக்க, சுழலும் வாளிருக்க சுக்குமாந்தடியிருக்க ஏன் பயந்து சாகிறுய்?

பூசாரி : அபச்சாரம்! அபச்சாரம்!

குண : அபச்சாரம். அம்பாளின் சன்னதியை ஆனந்த அறையாக்கிக் கொண்டது அபச்சாரமில்லையா? ஆலிங்கன விடுதியாக்கிக் கொண்டது அபச்சாரமில்லையா? கன்னியர் களின் கற்பையழிக்கும் காமக்கோட்டையாக்கிக் கொண்டது அபச்சாரமில்லையா? ஏ பூசாரி! நான் சாவுக்குத் துணிந்து

விட்டேன் எனக்குத் தெரியும் நான் செய்யப்போகும் காரியத்திற்கு எது வெகுமானமென்று, தூக்குமேடை தூக்குமேடை பரவாயில்லே புழுத்துப்போன சமுதாயத்தில் உன்போன்ற போலிப் பூசாரிகள் புண்ணியவான்கள் வேஷம் போடும் நாடகத்தை வீட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திற்கு என் செய்கை ஒரு பாடமாக இருக்கட்டும்.

பூசாரி : என்னடா தேவிக்கு விழா கொண்டாட்றபோது வந்து கலாட்டா பண்றே! (பூசாரி அரிவாளை ஓங்குகிறான்)

குண : (பூசாரியின் கையிலிருந்து அரிவாளைப் பிடுங்கிக் கொண்டு) விழா! தங்கையின் வாழ்வை பொசுக்க எண்ணிய உனக்கும் உன் தேவிக்கும் விழா! இல்லே, இதோ இந்தக் கத்திக்கு விழா! இரத்த விழா! வீர விழா! வெற்றிவிழா! பூசாரியின் தலையில் வெட்டுகிறான்)

காட்சி—44

சேகர் : கல்யாணி! கல்யாணி! என் கல்யாணி ஏழை அவளுக்கு நல்ல சேலை கிடையாது ஒரே புடவை ஒட்டுத் துணி...அவளுக்கு வைரநெக்லஸ் கிடையாது அவள் கழுத்திலே கயிறுதான் இருக்கும்...அய்யோ அதுகூட கிடையாது அவள் விதவை.

சப்ஸ் : டாக்டர்

டாக் : பயப்படாதீங்க மூளைக்கொதிப்பு மருந்து கொடுத்தால் சரியாகப் போய்விடும்.

சேகர் : மருந்து! ஹ ஹ எனக்கா மருந்து எனக்கு வேண்டாம் ஏழைக்குப் பசிக்காமல் இருக்க ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்க டாக்டர் கொடுக்கமாட்டீரா? கொடுக்க மாட்டீரா? கொடுக்கமாட்டீரா? கொடுக்காட்டி குழந்தைகளை ஆற்றிலே போட்டுவிடுவார்கள் டாக்டர் ஆற்றிலே போட்டு விடுவார்கள் என் கல்யாணியும் அப்படித்தான் செய்து விட்டாள் கல்யாணி! கல்யாணி!

காட்சி—45

(கோர்ட்டில் குணசேகரன்)

குண : நீதி மன்றம் விசித்திரம் நிறைந்த பலவழக்குகளை சந்தித்திருக்கிறது புதுமையான மனிதர்களைக் கண்டிருக்கிறது ஆகவே இவ்வழக்குவிசித்திரமுமல்ல வழக்காடும்நான்புதுமையான மனிதனுமல்ல வாழ்க்கைப்பாதையிலே சர்வசாதாரணமாக காணக்கூடிய ஜீவன் நான் கோவிலிலே குழப்பம் விளைவித்தேன் பூசாரியைத் தாக்கினேன் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன் இப்படியெல்லாம் நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். நான் இதையெல்லாம் மறுக்கப்போகிறேனென்று இல்லை! நிச்சயமாக இல்லை! கோவிலிலே குழப்பம் விளைவித்தேன்

கோவில் கூடாது என்பதற்காக அல்ல கோவில் கொடிய வரின் கூடாரமாய் இருக்கக்கூடாது என்பதற்காக பூசாரி யைத் தாக்கினேன் அவன் பக்தன்என் பதற்காக அல்ல பக்தி பகல் வேஷமாகி விட்டதைக் கண்டிப்பதற்காக

[நடுவில் ஒரு வக்கீல் எழுந்திருக்கிறார்]

உனக்கேன் இவ்வளவு அக்கரை? உலகத்தில் யாருக்கு மில்லாத அக்கறை என்று கேட்பீர்கள் நானே பாதிக்கப் பட்டேன் நேரடியாகப் பாதிக்கப்பட்டேன்! சுயநல மென் பீர்கள் என் சுயநலத்தில் பொதுநலமும் கலந்திருக்கிறது ஆகாரத்திற்காக அழுக்கைச்சாப்பிட்டுத் தடாகத்தை சுத்தப் படுத்துகிறதே மீன் அதைப்போல் என்னைக் குற்றவாளி குற்றவாளி என்கிறார்களே இந்தக் குற்றவாளியின் வாழ்க் கைப் பாதையிலே கொஞ்சதூரம் பின் நோக்கி நடந்து பார்த் தால் அவன் கடந்துவந்துள்ள காட்டாறுகள் எவ்வளவு என்று கணக்குப் பார்க்கமுடியும் பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை என் பாதையில் படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந் திருக்கின்றன தென்றலைத் தீண்டியதில்லை நான் ஆனல் தீயைத் தாண்டியிருக்கிறேன் கேளுங்கள் என் கதையை நீதிபதி அவர்களே தீர்ப்பு எழுதுவதற்கு முன் தயவுசெய்து கேளுங்கள்! தமிழ் நாட்டினிலே இத்திருவிடத்திலே பிறந்த வன் நான், பிறக்க ஒருநாடு, பிழைக்க ஒரு நாடு தமிழ் நாட்டின் தலையெழுத்துக்கு நானென்ன விதிவிலக்கா? ரங்கூன் அது என் உயிரை வளர்த்தது என்னை உயர்ந்த வனுக்கியது திருமண கோலத்திலிருந்த என் தங்கையைக் காணவந்தேன் மோசடி வழக்கிலே ஈடுபட்டு இதோ குற்ற வாளிக்கூண்டிலே உங்கள் முன் நிற்கிறளே இந்த ஜாலக்காரி ஜாலி இவள் வலையில் விழுந்தவர்களில் நானும் ஒருவன் பணப்பெட்டியை பறிகொடுத்தேன் பசியால் மெலிந்தேன் நலிந்தேன் கடைசியில் பைத்தியமாக மாறினேன். காண வந்த தங்கையைக் கண்டேன் கண்ணற்ற ஓவியமாக ஆம்! கைம்பெண்ணாக, தங்கையின் பெயரோ கல்யாணி மங்கள கரமான பெயர்! ஆனல் கழுத்திலே மாங்கல்யமில்லை செழித்து வளர்ந்த குடும்பம் சீரழிந்து விட்டது. கையிலே பிள்ளை! கண்களிலே நீர்! கல்யாணி அலைந்தாள் கல்யாணிக்காக நான் அலைந்தேன், கல்யாணிக்குக் கருணை காட்டினர் பலர் அவர்களிலே காளையர் சிலர் அவளுடைய காதலைக் கேட்டனர். கொலை வழக்கிலே ஈடுபட்டு உங்கள் முன் நிற்கி றனே இக்கொடியவன் வேணு இவன் பகட்டால் என் தங்கையை கற்பழிக்க முயன்றான் நான் தடுத்திராவிட்டால் கல்யாணி அப்போதே தற்கொலை செய்து கொண்டிருப்பாள். கடவுள் பக்தர்களும் கல்யாணிக்குக் கருணைகாட்ட முன்

வந்தார்கள் பிரதி உபகாரமாக அவள் கடைக்கண் பார்வை யைக் கேட்டனர். அதில் தலையானவன் இந்தப் பூசாரி கல்யாணியின் கற்பை காணிக்கையாக கேட்டிருக்கிறான் பராசக்தியின் பெயரால் உலகமாதாவின் பெயரால் கல்யாணி உலகத்தில் புழுவாகத் துடித்தபடியாவது உயிரோடிருந் திருப்பாள் அவனைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டியது இந்த பூசாரிதான் தன் குழந்தையை இந்த இரக்கமற்ற உலகத்தில் விட்டுச் செல்ல அவள் விரும்பவில்லை தன் குழந்தை ஆதரவற்றுத் துடித்துச் சாவதைக்காண அவள் விரும்பவில்லை அவளே கொன்று விட்டாள்.

விருப்பமானவர்களைக் கொல்வது விந்தையல்ல உலக உத்தமர்காந்தி, அறிஞர்சாமூர்த்தி ஜீவகாருண்யசீலர் அவரே நோயால் துடித்துக்கொண்டிருந்த கன்றுக்குட்டியைக் கொன் றுவிடச் சொல்லியிருக்கிறார் அது கஷ்டபடுவதைக் காணச் சகியாமல். அந்த முறையைத்தான் கையாண்டிருக்கிறாள் கல்யாணி, இது எப்படி குற்றமாகும்? வெளிநாட்டிலிருந்து திரும்பிய ஒரு தமிழனுக்கு வாழவழியில்லை தமிழ் நாட்டில் பிறந்த பெண்ணுக்கு வாழ்வதற்கு தக்க பாதுகாப்பில்லை ஆனால் என் தங்கை கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால் கோடீஸ்வரன் வீட்டுப்பள்ளியறையிலே ஒருநாள் மானத்தை விலை கூறியிருந்தால் மாளிகைவாசியின் மடியிலே ஒருநாள் இப்படி ஓட்டியிருக்கலாம் நாட்களை, இதைத்தானே இந்த நீதி மன்றம் விரும்புகிறது பகட்டு என் தங்கையை மிரட்டியது— பயந்து ஓடினாள் பணம் என் தங்கையைத் துரத்தியது— மீண்டும் ஓடினாள் பக்தி என் தங்கையை பயமுறுத்தியது— ஓடினாள், ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள் அந்த ஓட்டத்தைத் தடுத்திருக்க வேண்டும், வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும் இன்று சட்டத்தை நீட்டுவோர் செய்தார்களா? வாழவிட்டார்களா என் கல்யாணியை?

வக் குற்றவாளி யார் வழக்கிற்கோ வக்கீலாகமாறுகிறார்

குண : யார் வழக்கிற்குமில்லை. அதுவும் என் வழக்குத் தான், என் தங்கையின் வழக்கு தங்கையின் மானத்தை அழிக்க எண்ணிய மாபாவிக்கு புத்தி புகட்ட அண்ணன் ஓடுவதில் என்ன தவறு? கல்யாணி தற்கொலை செய்துகொள்ள முயன்றது ஒரு குற்றம் குழந்தையைக் கொன்றது ஒரு குற்றம் நான் பூசாரியைத் தாக்கியது ஒரு குற்றம் இத்தனை குற்றங் களுக்கும் யார் காரணம் கல்யாணியை கஞ்சிக்கில்லாமல் அலைய விட்டது யார் குற்றம்? விதியின் குற்றமா அல்லது விதி யின் ஏஜெண்சொல்லி வயிறு வளர்க்கும் வீணர்களின் குற்றமா பணம் பறிக்கும் கொள்ளைக்கூட்டத்தை வளரவிட்டது யார் குற்றம்? பஞ்சத்தின் குற்றமா அல்லது பஞ்சத்தை மஞ்சத்

திற்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா? கடவுளின் பெயரால் காமலீலைகள் நடத்தும் போலிப் பூசாரிகளை நாட்டிலே நடமாடவிட்டது யார் குற்றம்? கடவுளின் குற்றமா? அல்லது கடவுளின் பெயரைச் சொல்லி காலசேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா? இக்குற்றங்கள் களையப்படும் வரை குணசேகரன்களும் கல்யாணிகளும் குறையப்போவதில்லை இதுதான் எங்கள் வாழ்க்கை ஏட்டில் எந்தப்பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம் பகுத்தறிவு பயனுள்ள அரசியல் தத்துவம்.

நீதி : குற்றவாளியைத் தண்டிக்க தனிப்பட்டஎவருக்கும் உரிமை கிடையாது உன்னுடைய வாதம் சாக்காரையோ, சட்டத்தையோ அவமதிப்பதாக இருக்கக்கூடாது நடந்ததை சொல்லத்தான் உனக்கு உரிமை கொடுக்கப்பட்டதே தவிர அனுவசியமா எதையும் பேசக்கூடாது உன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல் கல்யாணி உண்மையிலேயே உன் தங்கைதானா?

குண : இந்தக்கேள்வி தங்களுக்கே வேடிக்கையாகஇல்லை

நீதி : சரி கல்யாணியை வரச்சொல்

நீதி : இவன் உன் அண்ணனா?

கல் : இல்லை கிறுக்கண்ணுஎன்று கூப்பிடுவேன்! சொந்த அண்ணன் கிடையாது.

குண : கல்யாணி நான் உன் சொந்த அண்ணன்! நான் தான் குணசேகரன்.

நீதி : என்னம்மா?

கல் : அவருக்கு கொஞ்சம் பைத்தியம்!

குண : ஆம்! பைத்தியம்தான் பைத்தியக்காரனாக நடித்தேன் என் தங்கையின் வாழ்வை வேதனை படுத்தக்கூடாது என்பதற்காக நீதிபதி அவர்களே தயவு செய்து இதை நம்பி விடாதீர்கள் எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்.

நீதி : அதைப்பற்றி நீபேசக்கூடாது, அது குழந்தையை கொன்ற குற்றம் (விமலா குழந்தையுடன் வந்து)

வித : இல்லை! இல்லை! கல்யாணி குற்றம் செய்யவில்லை குழந்தையும் கொல்லப்படவில்லை. இதோ இருக்கிறது கல்யாணியின் குழந்தை.

குண : விமலா

வித : குணு!

நீதி : குழந்தை எப்படி உன்னிடம் கிடைத்தது.

வித : நிலவுகால இரவில் நான் வழக்கமாக ஆற்றில் படகில் செல்வது வழக்கம். அப்போது இந்தக் குழந்தை என்

படகில் வந்து விழுந்தது: குழந்தை யாருடையதென்று தெரியாமல் நானே வளர்த்து வந்தேன் சுற்றுப்பயணம் சென்றிருந்த என் அண்ணு வந்து சேர்ந்தார். (திருப்புக் காட்சி)

விம : பாருங்கண்ணு!

அண் : இந்த குழந்தை யாருடையது?

விம : வழக்கம் போலே நான் படகில் செல்லும்போது இந்த குழந்தை படகில் வந்து விழுந்தது யார் குழந்தை என்று தெரியாமல் எடுத்து வளர்த்தேன்.

அண் : கல்யாணியின் குழந்தையாக இருக்கலாம்?

விமா : யாரைச் சொல்கிறீர்கள்?

அண் : பட்டினியால் குழந்தையைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொள்ள போகும்போது கல்யாணி என்ற பெண் பிடிபட்டாள் வாசிக்கிறார். (திருப்புக் காட்சி)

விம : உண்மையை அறிந்த நான் குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடிவந்தேன்.

நீதி : இவர்களே யார் என்று உனக்குத் தெரியுமா?

விம : தெரியும்! இவர் குணசேகரன்! குணசேகரன் தங்கை கல்யாணி.

கல் : (குணசேகரனை பார்த்து) அண்ணு...

குண : கல்யாணி?

நீதி : வேடிக்கையான வழக்கு (நீதிபதி கருணை காட்டலாம் என சிபார்சு செய்கிறார்) (கல்யாணி விமலா குணசேகரன் சந்திரசேகர் வீட்டுக்குப் போகின்றனர்)

காட்சி—46

ஞான : அய்யா! பிச்சைக்கார மாநாடு ஒன்று நடத்தப் போகிறேம் அதற்கு ஏதாவது நன்கொடை.

வீட் : ஏம்பா உங்களுக்கு வேலையில்லே.

ஞான : வேலையில்லாமதான நடத்துகிறேம்.

வீட் : நாங்க ஒங்களுக்கெல்லாம் நன்கொடை கொடுத்தா நாங்களும் ஒங்ககூட வரவேண்டியதுதான் போ போ...

காட்சி—47

சந் : கல்யாணி! கல்யாணி!

கல் : அண்ணு! அண்ணு என்னைப் பாருங்கள்?

குண : அண்ணனுக்கு என்ன செய்யுது அண்ணி

சரஸ் : இதோ உங்கள் தம்பி குணசேகரன், உங்கள் தங்கை கல்யாணி!

சந்: இல்லே! அவனே அவள் அண்ணன். காலால்உதைத்து விட்டான், அவள் ஆற்றிலே விழுந்து விட்டாள் இல்லே அவளுக்கு அவள் அண்ணன் தூக்குதண்டனை விதித்துவிட்டான்

குண : அண்ணு!

சந் : நான்தான் ஜட்ஜ்மெண்ட் எழுதினேன்; அண்ணனுக இருந்தால் என்ன தம்பியாக இருந்தால் என்ன? குற்றம் குற்றம்தான்.

சர : இதோ பாருங்கள் கல்யாணியின் குழந்தை

(சேகருக்கு பைத்தியம் மாறுகிறது அனைவரும் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர்)

சரஸ் : யாரது?

விம : நீங்க இருங்க! நான் போய்ப் பார்த்து வருகிறேன்! (ஞானசேகரிடம்) என்ன வேண்டும்?

ஞான : அம்மா அய்யா இருக்காங்களா?

விம : ஏன்?

ஞான : நாங்க ஒரு பிச்சைக்கார மகாநாடு நடத்த போகிறோம் அதற்கு நிதிகேட்க (விமலா சிரிக்கிறாள்) ஏம்மா சிரிக்கிறீங்க? இப்ப அப்படித்தான் இருக்கும்! இன்னும் கொஞ்ச நாள் போனால் பிச்சைக்காரனும் மந்திரி ஆகிடுவான்

(வீட்டு வேலைக்காரன் மூலம் ஞானசேகரன் என அறிகின்றனர். சிதறிய குடும்பம் சிந்தை மகிழ்கிறது)

விம : அப்போ நான் போயிட்டு வர்றேன்...

குண : இதற்குள்ளாகவா?

விம : வீட்டிலே தேடுவாங்க!

குண : அப்புறம் உன்னை எப்ப பார்க்கிறது?

விம : இனிமேல் பார்க்கவே முடியாது!

குண : ஏன்?

விம : அது அப்படித்தான்

குண : சரி அப்படியானால் போ... (விமலாவின் சேலையில் குணசேகரன் கட்டிய கயிற்றினால் நிறுத்தப்படுகிறாள்)

குண : இன்பக் கனவை ஏனே கலைக்கிறாய்?

அன்புக்கயிறிதுதான் அறுக்க யாராலுமாகாதய்யா
புதுப் பெண்ணின் மனதைத்தொட்டுப்போறவரே
உங்க எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க
இளம் மனதைத் தூண்டிவிட்டுப் போறவரே
அந்த மர்மத்தைச் சொல்லிவிட்டுப் போங்க

சேகர் : என்னப்பா குணசேச—ர

சரஸ் : தம்பி இதுக்கு இவ்வளவு பெரிய கயிறு தேவை இல்லையே! சின்னக்கயிறு...கழுத்துக்கு பொருத்தமா இருந்தாலே போதும்! அதிலே ஒரு மஞ்சள்...

குண : அதெல்லாம் இந்தக் காலத்துக்கு தேவையில்லை அண்ணி. ரெண்டு மாலை, ஒரு சொற்பொழிவாளர் விஷயம் முடிஞ்சது. (இந்நேரம் கல்யாணி வருகிறாள்)

கல் : அதோடுமட்டும் போதாது. என் பையனுக்கு ஒரு பொண்ணு பெத்துக் கொடுக்கணும்!

குண : வாங்க...அம்மா! ஒரு காலணுவுக்கு இட்லி தர்றீங்களா? ஏன் சிரிக்கிறீங்க? பைத்தியக்காரன்னு நினைச்சிட்டியா மந்திரி நமது மாநகர் தன்னிலே மாத மும்மாரி மழை பெய்கிறதா டும்! டும்! டும்! (பழையவை நினைஞ்டுகிறுன்)

ஞான : சரிதான்! அப்போ நீங்களெல்லாம் இங்கேயே இருங்க நான் வர்றேன்.

சேகர் : ஏன் தம்பி நீ எங்கே போறே

ஞான நமக்கும் உங்களுக்கும் சரிபட்டு வராது. நீங்க பங்களா ஆபீஸ்னு பழகிட்டீங்க. நான் பரதேசி மடம், ஆலமரத்தடி. இப்படி பழகிட்டேன் அங்கேயே போகிறேன்.

கல் : அப்போ நானும் வர்றேன்.

குண : நானும் புறப்பட்டுட்டேன் அப்படின்னு.

விம : எல்லோருமே பரதேசி மடத்துக்கு போறதுக்குப் பதில் பரதேசிகளெல்லாம் பங்களாவுக்கு அழைக்கிறது தான் நல்லது.

சேகர் : ஆமாம்! அதுதான் சரியான யோசனை; ஞான சேகரா உன் கொள்கைப்படி பங்களாவாசி பரதேசியாக மாறக்கூடாது! பரதேசிகள் பூராவையும் பங்களாவாசியாக மாற்றுகிறதுதான் நல்லது.

ஞான : அப்படின்னு நான் போய் எல்லோரையும் கூட்டிட்டு வர்றேன். (பேதமின்றி பாடுகின்றனர்)

காட்சி—43

(சாந்தநாயகி அனுதை விடுதி திறக்கப்படுகிறது)

எல்லோரும் வாழ வேண்டும்—உயிர்கள்
இன்புற்றிருக்க வேண்டும்
நல்லோர்கள் எண்ணமிது—முத்தம்மா
நல்லற வாழ்வுமிதே (எல்லோ

கல்லாதா ரென்றொருவர் நம்மிடையே
இல்லாம லாக்க வேண்டும்
கொல்லாமை போற்ற வேண்டும் மனிதர்கள்
கூட்டுறவாக வேண்டும் (எல்லோ

இல்லாதாரை படைத்தான் என்றொருவன்
இருந்தால் அழியட்டுமே
இல்லார்கள் உள்ளாரென்று—முத்தம்மா
ஏனிந்த வேற்றுமைகள் (எல்லோ

—சுபம்—

கோபி பிரிண்டர்ஸ், சென்னை - 1.

வியாபாரிகளுக்கோர் நற்செய்தி

எங்களிடம் எல்லாவிதமான சினிமா பாட்டுப்புத்தகங்களும்
கதை வசனங்களும், பக்திப்பாடல் ரகங்கள் ராகசி சிலாதி
மின் தனிப் பாடல்கள், திரைப் பாடல புத்தகங்கள சிறுவர
கதைப்புத்தகங்கள், பள்ளிச்சிறுவர்களுக்குரிய அ. ஆ இ
A.B.C அட்டைகள், வாய்ப்பாடு, அரிச்சுவடி, பாரைபாடம
புதியமுறை வெளியீடுகளும் கிடைக்கும் வண்ணபடக்
காலண்டர்கள், சிறிய போட்போக்கள், ஸ்கூல சார்டுகள்
மேப் ரகங்கள் பிறந்தநாள் மற்றும் பிளாங்கல
வாழ்த்துக்களும கிடைக்கும்

வியாபாரிகள் விளம்பரம் செய்து
காலண்டர்கள் ஆர்டர்களை உடன்
மேட்டர் அடித்து தருகிறோம்.

வியாபாரிகளுக்கு
தனி சலுகை உண்டு

போன்
29419

பிரண்ட்ஸ் ஆப்செட்
காலண்டர்ஸ்
33, பந்தர் தெரு, சென்னை-1

FOC
PHONETIC
FRIENDS
OFFSET
CALENDARS
33, BUNDER STREET MADRAS-1